SURA'S

TN-TET

Tamilnadu Teacher Eligibility Test

சமூக அறிவியல்

தாள் – I & II

ஆசிரியர் தகுதி தேர்வு

2026
2025
2023
2019
2017
2013
2012 (மறுதேர்வு)
2012

ஒரிஜினல் வினாத்தாள்கள்
விளக்கமான விடைகளுடன்

சுரா காலேஜ் ஆஃப் காம்படிஷன்
சென்னை

E256

© PUBLISHERS

Tamilnadu Teacher Eligibility Test

சமூக அறிவியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு

ISBN : 978-93-6417-154-0

குறியீட்டு எண் : E256

(வெளியீட்டாளர்களின் எழுத்து மூலமான அனுமதி இன்றி இப்புத்தகத்தை மறுபதிப்புச் செய்யவோ, வேறு மொழிகளில் மொழிபெயர்க்கவோ, அச்சடிக்கவோ, போட்டோகாபி செய்யவோ கூடாது)

சுரா காலேஜ் ஆஃப் காம்படிஷன்

தலைமை அலுவலகம்: 1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை, அண்ணா நகர், சென்னை-600 040. ☎ 91-44-4862 9977, 4204 3273

ஜி.டி. கிருஷ்ணா பிரஸ், சென்னை – 600 102-இல் அச்சடிக்கப்பட்டு,
சுரா காலேஜ் ஆஃப் காம்படிஷன்
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை, அண்ணா நகர், சென்னை – 600 040 இல்
திரு. வீ.வீ.கே. கஸ்தூராசு அவர்களால் வெளியிடப்பட்டது.
தொலைபேசி : 91-44-4862 9977
email: suracollege@gmail.com; enquiry@surabooks.com; website: www.surabooks.com

பொருளடக்கம்

பக்கம்

TN-TET–2026 ஒரிஜினல் வினாத்தாள் (தாள்–1 & 2) விளக்கமான விடைகளுடன் ..... 1 – 14
TN-TET–2025 ஒரிஜினல் வினாத்தாள் (தாள்–1 & 2) விளக்கமான விடைகளுடன் ..... 1 – 13
TN-TET–2023 ஒரிஜினல் வினாத்தாள் (தாள்–1 & 2) விளக்கமான விடைகளுடன் ..... 1 – 11

TN-TET–2019 ஒரிஜினல் வினாத்தாள் (தாள்–1) விளக்கமான விடைகளுடன் ..... 1 – 3
TN-TET–2017 ஒரிஜினல் வினாத்தாள் (தாள்–1) விளக்கமான விடைகளுடன் ..... 3 – 4
TN-TET–2013 ஒரிஜினல் வினாத்தாள் (தாள்–1) விடைகளுடன் 5
TN-TET–2012 (மறுதேர்வு) ஒரிஜினல் வினாத்தாள் (தாள்–1) விடைகளுடன் 6
TN-TET–2012 ஒரிஜினல் வினாத்தாள் (தாள்–1) விடைகளுடன் 7

TN-TET–2019 ஒரிஜினல் வினாத்தாள் (தாள்–2) விளக்கமான விடைகளுடன் ..... 8 – 17
TN-TET–2017 ஒரிஜினல் வினாத்தாள் (தாள்–2) விளக்கமான விடைகளுடன் ..... 18 – 22
TN-TET–2013 ஒரிஜினல் வினாத்தாள் (தாள்–2) விடைகளுடன் ..... 23 – 25
TN-TET–2012 (மறுதேர்வு) ஒரிஜினல் வினாத்தாள் (தாள்–2) விடைகளுடன் ..... 26 – 28
TN-TET–2012 ஒரிஜினல் வினாத்தாள் (தாள்–2) விடைகளுடன் ..... 29 – 32

புதிய சமச்சீர் பாடத்திட்டம்

சமூக அறிவியல்

வரலாறு ..... 1 – 176
குடிமையியல் ..... 1 – 64
புவியியல் ..... 1 – 144
பொருளியல் ..... 1 – 48

❖✻✻✻✻❖

Teacher Eligibility Test (TET)

Schedule of Examination :

PAPER	TIMING
PAPER - I	3 hours
PAPER - II	3 hours

Pattern of Examination :-

The TN-TET examination will be of objective type with 150 questions. There will be no negative marks for wrong answers marked.

(i) Teachers who are already teaching I-V classes and those who wish to apply for the same in future are compelled to write Paper I exam. and score 60%.

(ii) Teachers who are already teaching VI-VIII classes and those who wish to apply for the same in future are compelled to write Paper II exam. and score 60%.

Note : Those who intend to be a teacher for both the levels (classes I to V and classes VI to VIII) must score 60% in each paper. (Paper I and Paper II)

SCHEME OF THE EXAMINATION

PAPER II (for Social Science Teachers)

Total Time : 3 Hours

S.No.	Subjects	No. of Questions	Marks
1.	Child Development and Pedagogy	30	30
2.	Language I (Medium of Instruction)	30	30
3.	Language II (Chosen from a list other than Language I)	30	30
4.	Social Science	60	60
		Total Questions - 150	Total Marks - 150

- Questions on Child Development and Pedagogy will focus on educational psychology of teaching and learning relevant to the age group of 6-11 years. Emphasis will be laid on understanding the characteristics and needs of diverse learners, interaction with learners and the attributes and qualities of a good facilitator of learning.
- Questions on Language I & II will focus on proficiency, elements of language, communication and comprehension abilities.
- Questions on Social Studies will focus on the concepts, problem solving abilities and pedagogical understanding of these subjects. Questions will be evently distributed over different divisions of the syllabus of that subject as prescribed for Classes VI to VIII by the appropriate Government.

தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு

ஒரிஜினல் வினாத்தாள் - 2026

காலம் : 3 மணி நேரம்
மதிப்பெண் : 150

தாள் – I

நாள் : 05.07.2026

PART - V அறிவியல்

121. திடநிலையில் உள்ள பனிக்கட்டி தன்வெப்ப ஏற்பு திறன் :
A) 4200 $Jkg^{-1}K^{-1}$ B) 2100 $Jkg^{-1}K^{-1}$
C) 460 $Jkg^{-1}K^{-1}$ D) 1000 $Jkg^{-1}K^{-1}$

விளக்கம்: விடை: (B)
பனிக்கட்டியின் தன்வெப்ப ஏற்புத்திறன் 2100 $Jkg^{-1}K^{-1}$ ஆகும். நீரின் தன்வெப்ப ஏற்புத்திறன் 4200 $Jkg^{-1}K^{-1}$ ஆகும்.

122. கீழ்க்கண்ட பொருட்களில் எதற்கு பரும வெப்ப விரிவு குணகத்தின் மதிப்பு அதிகம் :
A) அலுமினியம் B) நீர்
C) பாதரசம் D) பித்தளை

விளக்கம்: விடை: (B)
திடப்பொருட்களை விட திரவங்களுக்கு வெப்ப விரிவுக் குணகம் அதிகம். இங்கு கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் திரவமாகிய நீருக்கு பரும வெப்ப விரிவுக் குணகம் அதிகம்.

123. துணைக்கோளின் ஆற்றல் மதிப்பு :
A) சுழி மதிப்பு B) நேர்க்குறி மதிப்பு
C) எதிர்க்குறி மதிப்பு D) ஈரில்லா மதிப்பு

விளக்கம்: விடை: (C)
ஒரு துணைக்கோள் பூமியின் ஈர்ப்புப் புலத்தில் பிணைக்கப்பட்டு வலம் வருவதால், அதன் மொத்த ஆற்றல் எப்போதும் எதிர்க்குறி மதிப்பாகவே இருக்கும்.

124. 40°C வெப்பநிலை மதிப்பினை பாரன்ஹீட் மதிப்பிற்கு மாற்றுக.
A) 100°F B) 102°F
C) 104°F D) 101°F

விடை: (C)
விளக்கம்:

$$F = \left(\frac{9}{5} \times C\right) + 32$$

$$= \left(\frac{9}{5} \times 40\right) + 32$$

$$= (9 \times 8) + 32$$

$$= 72 + 32 = 104°F$$

125. மேகங்களிலிருந்து தரைக்கோ அல்லது தரையில் இருந்து மேகத்துக்கோ மின் துகள்கள் பாய்ந்து மிக அதிக அளவு மின்னழுத்த வேறுபாடு உருவாகும் நிகழ்ச்சி :
A) மழையின் போது B) நகரும் போது
C) மின்னலின் போது D) மின்னேற்றத்தின் போது

விடை: (C)
விளக்கம்:
வளிமண்டலத்தில் மேகங்களுக்கும் தரைக்கும் இடையே ஏற்படும் மிக அதிகமான மின்னிறக்கமே மின்னல் எனப்படுகிறது.

126. ராக்கெட்டில் திரவ எரிபொருளாக கீழ்க்கண்டவற்றுள் எது பயன்படாது ?
A) திரவ ஹைட்ரஜன் B) மெத்தில் ஆல்கஹால்
C) ஹைட்ரஜின் D) எத்தில் ஆல்கஹால்

விளக்கம்: விடை: (B)
மெத்தில் ஆல்கஹால்: இது குறைந்த ஆற்றல் அடர்த்தி மற்றும் அதிக நச்சுத்தன்மை கொண்டதால், ராக்கெட்டுகளில் பொதுவாகத் திரவ எரிபொருளாகப் பயன்படுத்தப்படுவதில்லை. எனவே, இதுவே இக்கேள்விக்கான சரியான விடையாகும்.

திரவ ஹைட்ரஜன்: இது அதிக ஆற்றல் தரக்கூடிய உந்துபொருள் (Propellant) ஆகும். நவீன விண்வெளி ராக்கெட்டுகளின் (கிரையோஜெனிக் என்ஜின்கள்) முதன்மை திரவ எரிபொருளாக இது பயன்படுத்தப்படுகிறது.

ஹைட்ரஜன்: இது திரவ நிலைக்குக் குளிர்விக்கப்பட்டு (திரவ ஹைட்ரஜனாக) ராக்கெட் எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகிறது.

எத்தில் ஆல்கஹால்: வரலாற்று ரீதியாக, உலகின் ஆரம்பகால புகழ்பெற்ற ராக்கெட்டுகளில் ஒன்றான ஜெர்மனியின் V-2 ராக்கெட்டில் எத்தில் ஆல்கஹால் (எத்தனால்) திரவ எரிபொருளாகப் பயன்படுத்தப்பட்டது.

127. அதிர்வெண் 50 Hz எனில், அலைவு காலம் என்ன?
A) 2 s B) 20 s
C) 0.2s D) 0.02 s

விளக்கம் : விடை: (D)
கொடுக்கப்பட்ட மதிப்பு
அதிர்வெண் $(f) = 50Hz$
சூத்திரம் : அலைவு காலம் $(T) = \frac{1}{(f)}$

$$T = \frac{1}{50}$$

$$T = 0.02\ s$$

128. பாரீஸ் சாந்துவின் வேதி வாய்ப்பாடு :
A) $CaSO_4$ B) $CaSO_4\ \frac{1}{2}H_2O$
C) $CaSO_4\ 2H_2O$ D) $MgSO_4\ \frac{1}{2}\ H_2O$

விளக்கம்: விடை: (B)
பாரிஸ் சாந்து : இதன் வேதிப்பெயர் கால்சியம் சல்பேட் ஹெமிஹைட்ரேட் (Calcium Sulphate Hemihydrate).
தயாரிப்பு: ஜிப்சம் ($CaSO_4 \cdot 2H_2O$) என்ற சேர்மத்தை 373K (100°C) வெப்பநிலைக்கு சூடாக்கும் போது, அது தனது நீர் மூலக்கூறுகளை இழந்து பாரிஸ் சாந்துவாக மாறுகிறது.
வேதிச்சமன்பாடு:

$$CaSO_4.2H_2O \xrightarrow{\Delta} CaSO_4\ \frac{1}{2}H_2O + 1\ \frac{1}{2}H_2O$$

129. போபால் விஷ வாயுத் துயரத்திற்குக் காரணமானது :
A) மெத்தில் ஐசோ சயனேட்
B) மெத்தில் ஐசோ சயனைடு
C) மெத்தில் சயனைடு
D) எத்தில் ஐசோ சயனைடு

விளக்கம்: விடை: (A)
1984 ஆம் ஆண்டு டிசம்பர் 2-3 தேதிகளில் மத்தியப் பிரதேசத்தின் போபாலில் உள்ள யூனியன் கார்பைடு இந்தியா லிமிடெட் (UCIL) பூச்சிக்கொல்லி ஆலையில் இந்த விபத்து நிகழ்ந்தது. இந்த விஷ வாயுத் துயரத்திற்குக் காரணமான வாயு மெத்தில் ஐசோ சயனேட் ஆகும்.

130. இரசக்கலவை என்பது ஒரு உலோகமும் ..... ம் கலந்த கலவையாகும்.
A) சில்வர் B) மெர்க்குரி
C) காப்பர் D) துத்தநாகம்

விளக்கம் : விடை: (B)
இரசக்கலவை (Amalgam) என்பது மெர்க்குரி (பாதரசம்) மற்றும் பிற உலோகங்கள் சேர்ந்த ஒரு கலவையாகும்.

இதில் முதன்மை உலோகம் எப்போதும் மெர்க்குரி (Mercury) ஆகத்தான் இருக்கும்.

131. $19K^{39}$ –ல் உள்ள புரோட்டான், நியூட்ரான் மற்றும் எண்ணிக்கை

A) 19, 20, 19 B) 20, 19, 20
C) 19, 19, 20 D) 20, 18, 19

விளக்கம்: **விடை: (A)**

பொட்டாசியம் தனிமத்தின் குறியீடு $_{19}K^{39}$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது.

அணு எண் (z) : கீழே உள்ள எண் 19 ஆகும்.

நிறை எண் (a) : மேலே முசூனசு ஷ்ஊன 39 நுமபஉன.

1. புரோட்டான்களின் எண்ணிக்கை :

1. அணு எண் = புரோட்டான்களின் எண்ணிக்கை
2. எனவே, புரோட்டான்கள் = 19

2. எலக்ட்ரான்களின் எண்ணிக்கை :

1. ஒரு நடுநிலை அணுவில் புரோட்டான்களின் எண்ணிக்கையும் எனக்ட்ரான்களின் எண்ணிக்கையும் சமம்.
2. எனவே, எலக்ட்ரான்கள் = 19

3, நியூட்ரான்களின் எண்ணிக்கை

1. நியூட்ரான்கள் = நிறை எண் (A) – அணு எண் (Z)
2. நியூட்ரான்கள் = 39 – 19 = 20

வரிசைப்படி (புரோட்டான், நியூட்ரான், எலக்ட்ரான்) : 19, 20, 19

132. BHC என்பது கீழ்க்கண்ட்வற்றுள் எந்த ஒன்று ?

A) நுண்ணுயிர்க்கொல்லி B) பூச்சிக்கொல்லி
C) பூஞ்சைக்கொல்லி D) களைக்கொல்லி

விளக்கம்: **விடை: (B)**

BHC என்பதன் விரிவாக்கம் Benzene Hexachloride (பென்சீன் ஹெக்சாகுளோரைடு) ஆகும். இது விவசாயம் மற்றும் பொது சுகாதாரத்தில் பூச்சிகள், பிற தீங்குயிரிகளை அழிக்கப் பரவலாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு செயற்கை வேதிப்பொருள் ஆகும். எனவே, இது ஒரு வீரியமிக்க பூச்சிக்கொல்லி (Insecticide) வகையைச் சேர்ந்தது.

133. கிரேக்க மொழியில் ஆக்ஸிஜன் என்பதன் பொருள் :

A) கார உருவாக்கி B) அமில உருவாக்கி
C) நீர் உருவாக்கி D) உப்பு உருவாக்கி

விளக்கம்: **விடை: (B)**

கிரேக்க மொழியில் ஆக்ஸிஜன் என்பதன் பொருள் அமில் உருவாக்கி ஆகும்

134. பொருத்துக :

தனிமம்	இணைதிறன்
a) சோடியம்	i. 3
b) மெக்னீசியம்	ii. 4
c) அலுமினியம்	iii. 1
d) கார்பன்	iv. 2

A) (a)–(ii), (b)–(iii), (c)–(i), (d)–(iv)
B) (a)–(i), (b)–(iv), (c)–(iii), (d)–(ii)
C) (a)–(iii), (b)–(iv), (c)–(i), (d)–(ii)
D) (a)–(iii), (b)–(iv), (c)–(ii), (d)–(i)

விளக்கம்: **விடை: (C)**

சோடியம் (Sodium) – இணைதிறன் 1
மெக்னீசியம் (Magnesium) – இணைதிறன் 2
அலுமினியம் (Aluminium) – இணைதிறன் 3
கார்பன் (Carbon) – இணைதிறன் 4

135. கீழ்க்கண்டவற்றில் எது தொல்லுயிர் ஆஞ்சியோஸ்பெர்ம்களுக்கு எடுத்துக்காட்டு :

A) நயடைட்டா B) குக்சோனியா
C) மெடுல்லோசா D) ஃபார்குலா

விளக்கம்: **விடை: (D)**

தொல்லுயிர் ஆஞ்சியோஸ்பெர்ம்கள் :

இவை புதைபடிவங்களாகக் கண்டறியப்பட்ட பழமையான பூக்கும் தாவரங்களாகும்.

ஃபார்குலா என்பது ஆஞ்சியோஸ்பெர்ம்களுக்கு சிறந்த எடுத்துக்காட்டு

(A) நயடைட்டா : இது ஒரு தொல்லுயிர் பிரையோஃபைட் தாவரமாகும்.

(B) குக்சோனியா : இது ஒரு தொல்லுயிர் டெரிடோஃபைட் எனப்படும் ஆரம்பகாலக் கடத்துதிசுத் தாவரமாகும்.

(C) மெடுல்லோசா : இது ஜிம்னோஸ்பெர்ம் பிரிவைச் சேர்ந்த ஒரு தொல்லுயிர் விதை பெரணியாகும்

136. ஒரு செல் துகள்களுக்கு அனிமல்கியூல்ஸ் என்று பெயரிட்டவர் யார் ?

A) ஆண்டோன்ஃபான் லியூவன்ஹாக்
B) இராபர்ட் பிரௌன்
C) இராபர்ட் ஹூக்
D) ரூடால்ப் விர்ச்சௌ

விளக்கம்: **விடை: (A)**

ஆண்டோன் வான் லீவன்ஹூக்: இவர் முதன்முதலில் நுண்ணோக்கியைக் கொண்டு குளத்து நீரில் இருந்த பாக்டீரியா மற்றும் புரோட்டோசோவா போன்ற ஒருசெல் உயிரினங்களைக் கண்டறிந்தார். அவற்றிற்கு அவர் 'அனிமல்கியூல்ஸ்' என்று பெயரிட்டார்.

இராபர்ட் ஹூக்: முதன்முதலில் 'செல்' (Cell) என்ற சொல்லைப் பயன்படுத்தியவர்.

இராபர்ட் பிரௌன்: செல்லின் உட்கருவைக் (Nucleus) கண்டறிந்தவர்

137. நீரியன் தாவரத்தில் எந்த வகை இலை அடுக்கமைவு காணப்படுகிறது?

A) மாற்றிலை அடுக்கமைவுB) எதிரிலை அடுக்கமைவு
C) மூவிலை அடுக்கமைவு D) வட்ட இலை அடுக்கமைவு

விளக்கம்: **விடை: (C)**

இலை அடுக்கமைவு (Phyllotaxy): தண்டு அல்லது கிளைகளில் இலைகள் அமைந்திருக்கும் முறை இலை அடுக்கமைவு எனப்படும். தாவரங்கள் அதிகளவு சூரிய ஒளியைப் பெறுவதற்காக இலைகள் ஒரு குறிப்பிட்ட வரிசையில் அமைந்துள்ளன.

மூவிலை அடுக்கமைவு (Ternate phyllotaxy): இம்முறையில் தண்டின் ஒவ்வொரு கணுவிலும் (Node) மூன்று இலைகள் வட்ட வடிவில் இணைந்திருக்கும். இதற்கு மிகச்சிறந்த உதாரணம் நீரியம் (அலரி) தாவரமாகும்.

138. செல் நுண்ணுறுப்புகளுடன் அதன் பணிகளை இணைக்க.

a) மைட்டோ காண்டிரியா	i. சுரத்தல்
b) பசுங்கணிகம்	ii. தற்கொலைப்பை
c) கோல்கை உடலம்	iii. ஒளிச்சேர்க்கை
d) லைசோசோம்	iv. சுவாசித்தல்

A) (a)–(iv), (b)–(iii), (c)–(i), (d)–(ii)
B) (a)–(iv), (b)–(ii), (c)–(iii), (d)–(i)
C) (a)–(i), (b)–(ii), (c)–(iv), (d)–(iii)
D) (a)–(i), (b)–(ii), (c)–(iii), (d)–(iv)

விளக்கம்: **விடை: (A)**

மைட்டோகாண்ட்ரியா (Mitochondria) – (iv) சுவாசித்தல் (Respiration)

மைட்டோகாண்ட்ரியா செல்லின் ஆற்றல் நிலையமாகச் செயல்பட்டு சுவாசித்தல் மற்றும் ஆற்றல் (ATP) உருவாக்கத்தில் பங்கெடுக்கிறது.

பசுங்கணிகம் (Chloroplast)- (iii) ஒளிச்சேர்க்கை (Photosynthesis)

பகங்கணிகம் சூரிய ஒளியைப் பயன்படுத்தி தாவரங்கள் உணவு தயாரிக்கும் ஒளிச்சேர்க்கை நிகழ்விற்கு உதவுகிறது.

கோல்கை உடலம் (Golgi Complex) – (i) சுரத்தல் (Secretion)

கோல்கை உடலங்கள் நொதிகள் மற்றும் புரதங்களைச் சுருக்கும் மற்றும் கடத்தும் பணியைச் செய்கின்றன.

லைசோசோம் (Lysosome) – (ii) தற்கொலைப்பை (Suicidal bag)

சரிமான நொதிகளைக் கொண்டுள்ள லைசோசோம்கள், சிதைந்த செல்களைத் தாமே அழித்துக் கொள்வதால் "செல்லின் தற்கொலைப்பைகள்" என அழைக்கப்படுகின்றன.

139. தவறான இணையைத் தேர்ந்தெடுக்கவும் :

A) நீட்டம் - டிரக்கீடுகள்
B) சைகஸ் - பவழ வேர்கள்
C) பிக்னோசைலிக் - பைனஸ்
D) ஆம்பர் - பைனிட்டிஸ் சக்ஸினிஃபெரா

விடை: (A)

விளக்கம்:

நீட்டம் பொதுவாக ஜிம்னோஸ்பெர்ம் (Gymnosperm) தாவரங்களின் சைலத்தில் குழாய்கள் இருப்பதில்லை; டிராக்கீடுகள் மட்டுமே இருக்கும். ஆனால், விதிவிலக்காக நீட்டம் தாவரத்தின் சைலத்தில் குழாய்கள் காணப்படுகின்றன. எனவே, 'நீட்டம் –டிராக்கீடுகள்' என்பது தவறான இணையாகும்.

சைகஸ் (Cycas): இதன் வேர்களில் நீலப்பசும் பாசிகள் கூட்டுயிர் வாழ்க்கை நடத்துவதால், அவை பவழ வேர்கள் (Coralloid roots) அழைக்கப்படுகின்றன. இது சரியான இணை.

பைனஸ் (Pinus): பைனஸ் தாவரத்தின் கட்டை மிகவும் அடர்த்தியாகவும் வன்மையாகவும் இருக்கும். இதனை பிக்னோசைலிக் என்பர். இது சரியான இணை.

ஆம்பர் (Amber): இது 'பைனிட்டிஸ் சக்ஸினிஃபெரா' எனப்படும் புதைபடிவ ஜிம்னோஸ்பெர்ம் மரத்திலிருந்து பெறப்படும் ஒரு கடினமான பிசின் ஆகும். இதுவும் சரியான இணை.

140. கருவுறுதலுக்கு பின் சூலின் எந்த பகுதி பெரிஸ்பெர்ம் ஆக மாற்றமடையும் ?

A) சூல்துளை
B) சூலக உள்ளுறை
C) சூல்திசு
D) எதிரடிச் செல்கள்

விடை: (C)

விளக்கம்:

பெரிஸ்பெர்ம் (Perisperm):

இது விதைகளில் காணப்படும் ஒரு ஊட்டச்சத்து திசு ஆகும்.

தோற்றம்: கருவுறுதலுக்குப் பின், சூலின் சூழ்திசு பகுதியே பெரிஸ்பெர்ம் ஆக மாறுகிறது.

பயன்: இது வளரும் கருவிற்குத் தேவையான உணவைச் சேமித்து வைக்கிறது (எ.கா. மிளகு, பீட்ரூட்).

141. ஜூன் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை வளர்க்கப்படும் பயிர்கள் .....

A) ரபி பயிர்கள்
B) காரிப் பயிர்கள்
C) சயாடு பயிர்கள்
D) நார் பயிர்கள்

விடை: (B)

விளக்கம்:

இந்தியாவில் நிலவும் பருவநிலையைப் பொறுத்து பயிர்கள் மூன்று முக்கியப் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன:

காரிப் பயிர்கள் (Kharif Crops): ஜூன் முதல் செப்டம்பர் வரையிலான தென்மேற்கு பருவமழை காலத்தில் வளர்க்கப்படுகின்றன. அதிக தண்ணீரும் வெப்பமும் தேவைப்படும். (உதாரணம்: நெல், சோளம், பருத்தி, நிலக்கடலை).

ரபி பயிர்கள் (Rabi Crops): அக்டோபர் முதல் மார்ச் வரையிலான குளிர் காலத்தில் வளர்க்கப்படுகின்றன. (உதாரணம்: கோதுமை, கடுகு, பார்லி).

சயாடு பயிர்கள் (Zaid Crops): மார்ச் முதல் ஜூன் வரையிலான கோடை காலத்தில் குறுகிய காலத்தில் வளர்க்கப்படும் இடைக்காலப் பயிர்கள் ஆகும். (உதாரணம்: தர்பூசணி, வெள்ளரிக்காய்).

142. செல் கொள்கைக்கு தொடர்பு அற்றது எது ?

1) அனைத்து உயிரினங்களும் செல்களால் ஆனவை
2) அனைத்து வளர்சிதை மாற்ற வினைகளும் செல்லுக்கு வெளியே நடைபெறுகிறது
3) ஏற்கெனவே உள்ள செல்களிலிருந்து புதிய செல்கள் தோன்றுகின்றன.
4) செல் மரபியல் தகவல்களை கொண்டிருக்காது

A) 1 மற்றும் 3
B) 2 மற்றும் 4
C) 2 மற்றும் 3
D) 3 மற்றும் 4

விடை: (B)

விளக்கம்:

செல் கொள்கையின்படி (Cell Theory) தவறான அல்லது தொடர்பற்ற கூற்றுகள் 2 மற்றும் 4 ஆகும்.

கூற்று 1 (சரி): அனைத்து உயிரினங்களும் செல்களால் ஆனவை. இது செல் கொள்கையின் முக்கிய விதி.

கூற்று 2 (தவறு): வளர்சிதை மாற்ற வினைகள் செல்லுக்கு உள்ளேதான் நடைபெறும், வெளியே அல்ல.

கூற்று 3 (சரி): புதிய செல்கள் அனைத்தும் ஏற்கனவே உள்ள செல்களிலிருந்தே உருவாகின்றன.

கூற்று 4 (தவறு): செல்கள் மரபியல் தகவல்களைக் (DNA/RNA) கொண்டிருக்கும்.

143. எந்த இணை சரியாகப் பொருத்தப்பட்டுள்ளது ?

A) தட்டைபுழுக்கள் - அஸ்காரிஸ்
B) உருளைப் புழுக்கள் - யானைக்கால் புழு
C) வளைதசை புழுக்கள் - சிலந்தி
D) கணுக்காலிகள் - மண்புழு

விடை: (B)

விளக்கம்:

உருளைப் புழுக்கள் (Roundworms / Nematodes):

யானைக்கால் புழு (Wuchereria bancrofti) நெமடோடா (Nematoda) எனப்படும் உருளைப் புழுக்கள் வகையைச் சேர்ந்ததாகும். இது மனிதர்களில் யானைக்கால் நோயை (Elephantiasis) ஏற்படுத்துகிறது. எனவே, இந்த இணை சரியாகப் பொருத்தப்பட்டுள்ளது.

தட்டைப்புழுக்கள் – அஸ்காரிஸ்:

அஸ்காரிஸ் (Ascaris) என்பது ஒரு உருளைப் புழு (Roundworm) ஆகும், தட்டைப்புழு (Flatworm) அல்ல.

வளைதசை புழுக்கள் –சிலந்தி:

சிலந்தி (Spider) என்பது கணுக்காலிகள் (Arthropoda) வகையைச் சேர்ந்தது, வளைதசை புழு அல்ல

கணுக்காலிகள் – மண்புழு:

மண்புழு (Earthworm) என்பது வளைதசை புழுக்கள் (Annelida) வகையைச் சேர்ந்தது, கணுக்காலி அல்ல.

144. மனித இரத்தத்தில் உள்ள லிம்போ சைட்டுகளை எளிய முறையில் வளர்ப்பது குறித்து முதன் முதலில் விளக்கியவர்கள் _____

A) மேலி லையன்
B) ஜியோ மற்றும் விவான்
C) ஃபிஷர் மற்றும் ரேஸ்
D) பௌன்ஸ்டின்

விடை: (B)

விளக்கம்:

1960 ஆம் ஆண்டில், விஞ்ஞானிகள் ஜியோ மற்றும் விவான் ஆகிய இருவரும் மனித இரத்தத்தில் உள்ள வெள்ளை இரத்த அணுக்களின் ஒரு வகையான லிம்போசைட்டுகளை (Lymphocytes) ஆய்வகத்தில் எளிய முறையில் வளர்க்கும் நுட்பத்தை முதன்முதலில் விளக்கினர். இந்த முறையில் வளர்க்கப்படும் செல்களின் மறைமுக செல் பிரிதல் (Mitosis) தூண்டப்படுகிறது. செல்கள் மெட்டாபேஸ் (Metaphase) நிலையை அடையும் போது, கோல்சிசின் என்ற வேதிப்பொருளைச் சேர்த்து செல் பிரிதல் நிகழ்வு அதே நிலையில் நிறுத்தப்படுகிறது. இதன் மூலம் குரோமோசோம்களைத் தனித்தனியாகப் பிரித்து, மனித உடலின் மரபியல் பண்புகளை ஆராயும் குரோமோசோம் தொகுப்பு வரைபடம் தயாரிப்பது எளிதாகிறது.

145. மையோகுளோபின் கீழ்க்கண்டவற்றுள் எவற்றை சேமித்துவைக்க உதவுகிறது.

A) Ca^{++} B) CO_2
C) O_2 D) Troponin விடை: (C)

146. மெலிந்த உடல் மடிப்புகளுடன் கூடிய தோல் இது ..... நோயின் அறிகுறி.

A) மராஸ்மஸ் B) ரிக்கட்
C) குள்ளத்தன்மை D) காலரா

விளக்கம்: விடை: (A)

மராஸ்மஸ் : இது கடுமையான புரத மற்றும் கலோரி ஊட்டச்சத்து குறைபாட்டால் ஏற்படும் நோய். இதனால் உடலில் உள்ள கொழுப்பு மற்றும் தசைகள் முற்றிலும் குறைகின்றன. இதனால் தோல் சுருங்கி, மடிப்புகளுடன் மெலிந்த உடல் தோற்றம் ஏற்படுகிறது.

(B) ரிக்கட்: இது வைட்டமின் D குறைபாட்டால் எலும்புகள் பலவீனமடையும் நோய்.

(C) குள்ளத்தன்மை: இது வளர்ச்சி ஹார்மோன் குறைபாட்டால் ஏற்படும் உடல் வளர்ச்சி பாதிப்பு.

(D) காலரா: இது அசுத்தமான நீர் மற்றும் உணவால் பரவும் தீவிர வயிற்றுப்போக்கு நோய்.

147. தமனி குறித்த சரியான கூற்றுகளை தேர்ந்தெடு.

(i) வழங்கும் குழாய்கள்
(ii) உடலின் மேற்பகுதியில் அமைந்துள்ளது
(iii) குறைந்த அழுத்தத்துடன் கூடிய இரத்த ஓட்டம்
(iv) தமனியின் சுவர்கள் வலிமையான, தடித்த மீளும் தன்மை உடையவை
(v) நுரையீரல் தமனியை தவிர மற்ற அனைத்து தமனிகளும் ஆக்ஸிஜன் மிகுந்த இரத்தத்தினை எடுத்து செல்கின்றன.
(vi) உள்ளீடு வால்வுகள் உண்டு

குறியீடுகள் :

A) (i), (ii), (iii), (iv) மற்றும் (v) சரியானவை
B) (ii) மற்றும் (v) சரியானவை
C) (i), (iv) மற்றும் (v) சரியானவை
D) (i), (ii), (v) மற்றும் (vi) சரியானவை

விளக்கம்: விடை: (C)

வழங்கும் குழாய்கள் (சரி): தமனிகள் (Arteries) இதயத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட இரத்தத்தை உடலின் பல்வேறு உறுப்புகளுக்கு எடுத்துச் சென்று வழங்குவதால், இவை 'வழங்கும் குழாய்கள்' என்று அழைக்கப்படுகின்றன.

உடலின் மேற்பகுதியில் அமைந்துள்ளது (தவறு):

தமனிகள் பொதுவாக உடலின் உட்பகுதியில் ஆழமாக அமைந்துள்ளன. உடலின் மேற்பகுதியில் (மேலோட்டமாக) அமைந்திருப்பவை சிரைகள் (Veins) ஆகும்.

குறைந்த அழுத்தத்துடன் கூடிய இரத்த ஓட்டம் (தவறு): இதயம் இரத்தத்தை அதிக விசையுடன் பம்ப் செய்வதால், தமனிகளில் இரத்தம் அதிக அழுத்தத்துடன் பாய்கிறது.

தமனியின் சுவர்கள் வலிமையான, தடித்த, மீளும் தன்மை உடையவை(சரி):

அதிக அழுத்தத்துடன் வரும் இரத்த ஓட்டத்தைத் தாங்குவதற்காக தமனிகளின் சுவர்கள் தடித்ததாகவும், மீள் தன்மை (Elastic) கொண்டதாகவும் வலிமையுடனும் காணப்படுகின்றன.

நுரையீரல் தமனியைத் தவிர மற்ற அனைத்து தமனிகளும் ஆக்ஸிஜன் மிகுந்த இரத்தத்தினை எடுத்துச் செல்கின்றன (சரி): பொதுவாக அனைத்து தமனிகளும் ஆக்சிஜன் நிறைந்த (சுத்தமான) இரத்தத்தையே கடத்துகின்றன. ஆனால், நுரையீரல் தமனி மட்டுமே இதற்கு விதிவிலக்காக ஆக்ஸிஜன் குறைந்த (அசுத்த) இரத்தத்தை இதயத்திலிருந்து நுரையீரலுக்கு எடுத்துச் செல்கிறது.

உள்ளீடு வால்வுகள் உண்டு (தவறு):

தமனிகளில் இரத்தம் அதிக அழுத்தத்துடன் ஒரே திசையில் பாய்வதால், அவற்றில் உள்நோக்கிய வால்வுகள் இருப்பதில்லை. வால்வுகள் பொதுவாக சிரைகளில் மட்டுமே காணப்படுகின்றன. எனவே, கொடுக்கப்பட்ட கூற்றுகளில் (i), (iv) மற்றும் (v) ஆகிய மூன்று கூற்றுகள் மட்டுமே சரியானவை என்பதால் விருப்பம் (C) சரியானதாகும்.

148. புரோதுரோம்பின் எனப்படும் புரதம் இதன் மூலம் துரோம்பினாக மாறுகிறது :

A) வைட்டமின் – D B) வைட்டமின் – E
C) வைட்டமின் – K D) வைட்டமின் – C

விளக்கம்: விடை: (C)

இரத்தம் உறைதல் : உடலில் காயம் ஏற்படும் போது ரத்தக்கசிவைத் தடுக்க இரத்தம் உறைதல் என்னும் உடலியல் செயல்முறை நடைபெறுகிறது.

வைட்டமின் K–இன் பங்கு: கல்லீரலில் இரத்த உறைதலுக்குத் தேவையான புரோத்ரோம்பின் (Prothrombin) உள்ளிட்ட சில முக்கிய புரதங்களின் (Factors II, VII, IX, X) உற்பத்திக்கு வைட்டமின் K இன்றியமையாதது.

துரோம்பினாக மாறுதல்:

இரத்தம் உறைதல் நிகழ்வின் போது, செயலற்ற நிலையில் உள்ள 'புரோத்ரோம்பின்' என்ற பிளாஸ்மா புரதம், வைட்டமின் K மற்றும் பிற காரணிகளின் உதவியுடன் செயலில் உள்ள 'துரோம்பின்' ஆக மாற்றமடைகிறது. இந்த துரோம்பின் பின்னர் ஃபைப்ரினோஜெனை ஃபைப்ரினாக மாற்றி இரத்தத்தை உறைய வைக்கிறது. எனவே, புரோத்ரோம்பினை துரோம்பினாக மாற்றுவதற்கு வைட்டமின்–K அவசியமாகிறது.

149. கிட்டப்பார்வை இவ்வாறு அழைக்கப்படுகிறது :

A) ஹைப்பர்மெட்ரோப்பியா B) மையோப்பியா
C) அஸ்டிக்மாடிசம் D) பிரஸ்பையோபியா

விளக்கம்: விடை: (B)

மையோப்பியா: இது மருத்துவ ரீதியாக கிட்டப்பார்வை அழைக்கப்படுகிறது. இந்த குறைபாடு உள்ளவர்களால் அருகில் உள்ள பொருட்களைத் தெளிவாகப் பார்க்க முடியும், ஆனால் தொலைவில் உள்ள பொருட்கள் மங்கலாகத் தெரியும்.

ஹைப்பர்மெட்ரோப்பியா: தூரப்பார்வை எனப்படும் இதில் தொலைவில் உள்ள பொருட்கள் தெளிவாகவும், அருகில் உள்ளவை மங்கலாகவும் தெரியும்.

அஸ்டிக்மாடிசம் : கண்ணின் கார்னியா பகுதியில் ஏற்படும் சீரற்ற வளைவால் பார்வை சிதைந்து காணப்படும்.

பிரஸ்பையோப்பியா : இது வயது முதிர்வு காரணமாகக் கண்ணின் லென்ஸ் நெகிழ்வுத்தன்மையை இழப்பதால் ஏற்படும் குறைபாடாகும்.

150. சிறுகுடலில் குடல் அலை இயக்கம் மற்றும் சுரப்புகளை தடை செய்யும் நரம்பு மண்டலம் :

A) புற நரம்பு மண்டலம் B) தானியங்கு நரம்பு மண்டலம்
C) பரிவு நரம்பு மண்டலம் D) இணை பரிவு நரம்பு மண்டலம்

விளக்கம்: விடை: (C)

பரிவு நரம்பு மண்டலம் (Sympathetic Nervous System):

இது உடலின் "சண்டை அல்லது பறத்தல்" (Fight or Flight) நிலைகளில் செயல்படுகிறது. அவசர காலங்களில் சரிமான அமைப்பின் செயல்பாடுகளைக் (குடல் அலை இயக்கம் மற்றும் சுரப்புகள்) தடை செய்கிறது.

இணை பரிவு நரம்பு மண்டலம் (Parasympathetic Nervous System):

இது உடலின் "ஓய்வு மற்றும் சரிமானம்" (Rest and Digest) நிலைகளில் செயல்படுகிறது. இது சரிமானத்தைத் தூண்டி, குடல் இயக்கத்தை அதிகரிக்கும்.

தானியங்கு நரம்பு மண்டலம் (Autonomic Nervous System):

இது பரிவு மற்றும் இணை பரிவு நரம்பு மண்டலங்களை உள்ளடக்கிய பொதுவான அமைப்பாகும்.

தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு
ஒரிஜினல் வினாத்தாள் - 2026

காலம் : 3 மணி நேரம்
மதிப்பெண் : 150

தாள் – I

நாள் : 05.07.2026

PART - IV சமூக அறிவியல்

91. சரியான காலவரிசையை தேர்ந்தெடு:

A) போர்ச்சுக்கல், ஆங்கிலேயர்கள், டச்சுக்காரர்கள், டேனியர்கள், பிரெஞ்சுக்காரர்கள்

B) ஆங்கிலேயர்கள், போர்ச்சுக்கல், டேனியர்கள், டச்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள்

C) டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள், டேனியர்கள், போர்ச்சுக்கல், பிரெஞ்சுக்காரர்கள்

D) போர்ச்சுக்கல், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள், டேனியர்கள், பிரெஞ்சுக்காரர்கள்

விளக்கம் : **விடை : (D)**

போர்ச்சுகீசியர்கள் : கி.பி. 1498 ஆண்டு வாஸ்கோடகாமா கடல்வழியாக முதன்முதலில் இந்தியாவிற்கு வந்தார்.

டச்சுக்காரர்கள்: கி.பி. 1602 ஆம் ஆண்டு டச்சு கிழக்கு இந்திய நிறுவனம் உருவாக்கப்பட்டு இந்தியாவிற்கு வந்தனர்.

ஆங்கிலேயர்கள்: கி.பி. 1600 இல் பிரிட்டிஷ் கிழக்கிந்திய நிறுவனம் தொடங்கப்பட்டு, கி.பி. 1608 இல் இந்தியாவிற்கு வந்தனர்.

டேனியர்கள் : கி.பி. 1616 ஆம் ஆண்டு டென்மார்க் நாட்டிலிருந்து இந்தியாவிற்கு வந்தனர்.

பிரெஞ்சுக்காரர்கள் : கி.பி. 1664 ஆண்டு இறுதியாக பிரெஞ்சு கிழக்கு இந்திய நிறுவனம் உருவாக்கப்பட்டு வருகை தந்தனர்.

92. ..... காலத்தில், பெர்னாண்டஸ் மதுரைக்கு வருகை புரிந்து அங்கு ஒரு தொடக்கப்பள்ளியை நிறுவினார்

A) சென்னப்ப நாயக்கர் B) செஞ்சி நாயக்கர்

C) வீரப்ப நாயக்கர் D) வையப்ப நாயக்கர்

விளக்கம் : **விடை : (C)**

ஐரோப்பிய கிறித்தவ மிஷனரியான (சமயப் பரப்புரையாளர்) பெர்னாண்டஸ் (Fr. Fernandez) மதுரைக்கு வந்தபோது, அங்கு மதுரை நாயக்கர் வம்சத்தைச் சேர்ந்த வீரப்ப நாயக்கர் ஆட்சி புரிந்து கொண்டிருந்தார். வீரப்ப நாயக்கரின் அனுமதியைப் பெற்று மதுரையில் கிறித்தவ சமயப் பணிகளுடன், அங்கு ஒரு தொடக்கப் பள்ளியையும் பெர்னாண்டஸ் நிறுவினார்.

நாயக்கர் ஆட்சியின் கீழ் மதுரை மண்டலத்தில் திண்ணைப் பள்ளிக்கூடங்களைத் தாண்டி, முறையான கல்வி அமைப்பை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகால ஐரோப்பிய முயற்சிகளில் இதுவும் ஒன்றாகும்.

93. அஸ்ஸாம் தேயிலை நிறுவனம் தொடங்கப்பட்ட ஆண்டு .....

A) 1840 B) 1835

C) 1838 D) 1839

விளக்கம் : **விடை : (D)**

அஸ்ஸாம் தேயிலை நிறுவனம் 1839 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதுவே வர்த்தக ரீதியில் தேயிலை வளர்ப்பதற்கும் தயாரிப்பதற்கும் இந்தியாவில் நிறுவப்பட்ட முதல் தேயிலை நிறுவனமாகும்.

94. சரியாகப் பொருத்தி விடையைத் தெரிவு செய்க.

a) அடிமை வம்சம்	1. 1414–1451
b) கில்ஜி வம்சம்	2. 1320–1414
c) துக்ளக் வம்சம்	3. 1290–1320
d) சையது வம்சம்	4. 1206–1290

குறியீடுகள் :

	a)	b)	c)	d)
A)	3	1	2	4
B)	4	3	2	1
C)	1	2	3	4
D)	2	1	4	3

விளக்கம் : **விடை : (B)**

டெல்லி சுல்தானியம்

1206–1526 காலகட்டத்தில் ஐந்து வெவ்வேறு வம்சங்களைச் சேர்ந்தவர்கள் தில்லி சுல்தானியத்தை ஆட்சி செய்தனர்.

1. அடிமை வம்சம் (1206–1290) – 10 சுல்தான்கள்
2. கில்ஜி வம்சம் (1290–1320) – 6 சுல்தான்கள்
3. துக்ளக் வம்சம் (1320–1414) – 11 சுல்தான்கள்
4. சையது வம்சம் (1414–1451) – 4 சுல்தான்கள்
5. லோடி வம்சம் (1451–1526) – 3 சுல்தான்கள்

95. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து பொருத்துக.

a) குத்புதீன் ஐபக்	1. 1290–1296
b) பால்பன்	2. 1296–1316
c) ஜலாலுதீன் கில்ஜி	3. 1266–1287
d) அலாவுதீன் கில்ஜி	4. 1206–1210

குறியீடுகள் :

	a)	b)	c)	d)
A)	4	2	3	1
B)	4	3	1	2
C)	4	3	2	1
D)	1	2	3	4

விளக்கம் : **விடை : (B)**

வ. எண்	வம்சம்	ஆட்சியாளர்கள்
1.	அடிமை வம்சம்	(1206-1290)
	குத்புதீன் ஐபெக்	(1206-1210)
	இல்டுமிஷ்	(1210-1236)
	சுல்தானா இரசியா	(கி.பி. 1236-1240)
	பால்பன்	(1266-1287)
2.	கில்ஜி வம்சம்	(1290-1320)
	ஜலாலுதீன் கில்ஜி	(1290-1296)
	அலாவுதீன் கில்ஜி	(1296-1316)
3.	துக்ளக் வம்சம்	(1320-1414)
	கியாசுதீன் துக்ளக்	(கி.பி.1320-1325)
	முகமது பின் துக்ளக்	கி.பி. 1325 - 1351)
	பிரோஷ் ஷா துக்ளக்	(1351 - 1388)
4.	சையது வம்சம்	(1414-1451)
	கிஸர்கான்	(1414-1421)

வ. எண்	வம்சம்	ஆட்சியாளர்கள்
	முபாரக்ஷா	(1421- 1434)
	முகமது ஷா	(1435 - (1445)
	ஆலம்ஷா	(1445 - 1451)
5.	லோடி வம்சம்	(1451-1526)
	பஹ்லால் லோடி	(1451- 1489)
	சிக்கந்தர் லோடி	(1489- 1517)
	இப்ராஹிம் லோடி	(1517-1526)

96. ஒரு சாதாரண வருவாய்த்துறை அலுவலராகத் தனது பணியைத் தொடங்கிய பாலாஜி விஸ்வநாத் ..... இல் பேஷ்வா ஆனார்

A) 1712 B) 1713
C) 1715 D) 1716

விளக்கம் : **விடை : (B)**

பேஷ்வாக்களின் ஆட்சி

பேஷ்வா என்பவர் சிவாஜியின் அஷ்டபிரதான் அமைப்பில் முதன்மையானவர். 18–ஆம் நூற்றாண்டில் பேஷ்வாக்கள் அதிக அதிகாரங்களைப் பெற்று ஆட்சி புரிந்தனர்.

பாலாஜி விஸ்வநாத் (1713–1720)

சாதாரண வருவாய்த்துறை அலுவலராகத் தமது பணியைத் தொடங்கிய பாலாஜி விஸ்வநாத் 1713–இல் பேஷ்வா ஆனார்.

இவர் ஆற்றல் மிகுந்த முதல் பேஷ்வா ஆவார். உள்நாட்டுப் போரில் ஏற்பட்ட சிக்கல்களை நீக்க மன்னர் சாஹூவுக்கு உதவினார்.

97. "நீல் தர்பன்" என்ற நாடகம் ..... என்பவரால் எழுதப்பட்டது.

A) பக்கிம் சந்திர சாட்டர்ஜி B) ரவீந்திரநாத் தாகூர்
C) W.C.பானர்ஜி D) தீனபந்து மித்ரா

விளக்கம் : விடை : (D)

தினபந்து மித்ரா என்பவரால் 1858–1859 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க வங்காள மொழி நாடகம் நீல் தர்பன் (தலைப்பு: இண்டிகோவின் கண்ணாடி) ஆகும்.

98. நாடு முழுவதும் 10+2+3 என்ற ஒரே மாதிரியான கல்விமுறையை அறிமுகப்படுத்திய குழுவின் தலைவராக இருந்தவர் யார்?

A) டாக்டர் இராதாகிருஷ்ணன் B) டாக்டர் D.S. கோத்தாரி
C) சர் தாமஸ் மன்றோ D) மெக்காலே பிரபு

விளக்கம் : **விடை : (B)**

1948–இல் பல்கலைக்கழக கல்வி குறித்த அறிக்கையைத் தயாரிக்க டாக்டர் இராதாகிருஷ்ணன் கல்விக் குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவின் பரிந்துரைகளைப் பின்பற்றி உயர்கல்வியின் தரத்தை நிர்ணயிக்க பல்கலைக்கழக மானியக்குழு அமைக்கப்பட்டது.

1964–இல் இந்திய அரசு D.S. கோத்தாரி தலைமையில் ஒரு கல்விக் குழுவை நியமித்தது. அக்குழு 14 வயது வரையிலான அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாய தொடக்கக் கல்வியையும் நாடு முழுவதும் ஒரேமாதிரியான 10 + 2 + 3 கல்வி அமைப்பையும் பரிந்துரை செய்தது.

99. சதி எனும் நடைமுறையை ஒழிக்க சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு .....

A) 1820 B) 1826
C) 1829 D) 1832

விளக்கம் : **விடை : (C)**

கணவர் இறந்தவுடன் அவரது இறுதிச் சடங்குத் தீயில் மனைவியையும் உயிருடன் எரிக்கும் கொடூரமான 'சதி' (உடன்கட்டை ஏறுதல்) பழக்கத்தைத் தடை செய்ய 1829 ஆம் ஆண்டு டிசம்பர் 4 அன்று வங்காள சதி ஒழுங்குமுறைச் சட்டம் (Bengal Sati Regulation) கொண்டு வரப்பட்டது.

அப்போதைய பிரிட்டிஷ் இந்தியாவின் கவர்னர் ஜெனரலான வில்லியம் பெண்டிங்க் பிரபு இச்சட்டத்தை இயற்றினார்.

முக்கியப் பங்கு: இந்திய சமூக சீர்திருத்தவாதியான ராஜா ராம் மோகன் ராய் சதிக்கு எதிராகத் தீவிரமாகப் போராடி, இச்சட்டம் இயற்றப்படுவதற்கு முதன்மைக் காரணமாக இருந்தார்.

இச்சட்டத்தின் மூலம் சதி நடைமுறை முற்றிலும் சட்டவிரோதமானது என அறிவிக்கப்பட்டு, அதை ஆதரிப்பதோ அல்லது தூண்டுவதோ கொலைக் குற்றத்திற்கு இணையான தண்டனைக்குரிய குற்றமாக மாற்றப்பட்டது.

100. ஆக்ராவை நிர்மாணித்து அதைத் தலைநகராக ஆக்கிக் கொண்ட அரசர் யார்?

A) சிக்கந்தர் லோடி B) இப்ராகிம் லோடி
C) பகலூல் லோடி D) அலாவுதீன் கில்ஜி

விளக்கம் : **விடை : (A)**

டெல்லியை ஆண்ட சுல்தான்களில் இறுதியாக ஆட்சி செய்தது லோடி மரபாகும். லோடி வம்ச ஆட்சியை நிறுவியவர் பஹ்லோல் லோடி ஆவார். இவரது ஆட்சிக்காலம் கி.பி.1451–1489 ஆகும். இவரது மகன் சிக்கந்தர் லோடியின் ஆட்சிக் காலம் கி.பி.1489–1517 ஆகும். இவர் தலைநகரை தில்லியிலிருந்து ஆக்ராவிற்கு மாற்றினார். இந்நகரம் நிறுவப்படுவதற்கு அடித்தளமாக இருந்தார்.

101. அஸ்ஸாமில் "இடம் பெயர் வேளாண்மை" செய்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ள இடங்கள்

A) லேகுரதேவா (ம) சோபானி முண்டா
B) செனுவார் (ம) மககரா
C) ராக்கி கார்ஹி (ம) டோலவீரா
D) தாஜலி ஹோடிங் (ம) சருதரு

விளக்கம் : **விடை : (D)**

தாஜலி ஹோடிங் மற்றும் சருதரு : இவை இரண்டும் வடகிழக்கு இந்திய மாநிலமான அஸ்ஸாமில் அமைந்துள்ள முக்கியமான புதிய கற்கால தளங்கள் ஆகும். இப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகளில், மக்கள் காடுகளை அழித்து, எரித்து விவசாயம் செய்ததற்கான (இடப்பெயர் வேளாண்மை) பழங்கால சான்றுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

லேகுரதேவா, சோபானி முண்டா, மககரா: இவை உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ள வரலாற்றுத் தளங்கள்.

செனுவார்: இது பீகார் மாநிலத்தில் உள்ள ஒரு புதிய கற்கால தளம்.

ராக்கி கார்ஹி, டோலாவீரா: இவை சிந்து சமவெளி நாகரிகத்திற்கு சொந்தமான வடமேற்கு இந்தியத் தளங்கள் ஆகும்.

102. கீழ்க்கண்ட வாக்கியத்தில் மகல்வாரி முறைக்கு தகுந்த சரியான கூற்றை தேர்ந்தேடு:

a) கிராமத் தலைவர் அரசுக்கும், கிராம மக்களுக்குமிடையே இடைத்தரகராக செயல்பட்டார்
b) வருவாய் ஒப்பந்தம் நேரடியாக விவசாயிகளுடன் செய்து கொள்ளப்பட்டது
c) ஜமீன்தார்கள் நில உடைமையாளர்களாக அங்கீகரிக்கப்பட்டனர்
d) நில அளவு மற்றும் விளைச்சலின் மதிப்பீடு கணக்கிடப்பட்டது

A) (b) B) (a)
C) (d) D) (c)

விளக்கம் : **விடை : (B)**

மகல்வாரி முறை

- ஜமீன்தாரி முறையின் மாறுபட்ட வடிவமே மகல்வாரி முறையாகும். இதனை உருவாக்கியவர் ஹோல்ட் மெக்கன்ஸி ஆவார். இம்முறையில் சில அடிப்படை மாற்றங்களை 1833–இல் வில்லியம் பெண்டிங் பிரபு கொண்டுவந்தார். அம்மாற்றங்களை கொண்டு வருவதற்கு இராபர்ட் மெர்தின்ஸ் பர்ட் என்பவர் வழிகாட்டினார்.
- மகல் (அ) கிராம விளைச்சலின் அடிப்படையில் வருவாய் மதிப்பீடு செய்யப்பட்டது. தொடக்கத்தில் மொத்த விளைச்சலில் மூன்றில் இரண்டு பங்கு நிலவருவாய் பெறப்பட்டது. பின்னர் வில்லியம் பெண்டிங் பிரபு மொத்த விளைச்சலில் 50% என நிர்ணயித்தார்.

✿ கிராமம் முழுவதும் நில வருவாயை வசூல் செய்து அதனை அரசுக்கு செலுத்த கிராமத்தலைவர் நியமிக்கப்பட்டார். இந்தமுறை முதலில் ஆக்ரா, அயோத்தி போன்ற இடங்களில் அமல்படுத்தப்பட்டு பின்னர் ஐக்கிய மாகாணங்களில் விரிவுப்படுத்தப்பட்டது.

நடைமுறைப்படுத்தப்பட்ட இடங்கள் : 1822-இல் கங்கைச் சமவெளி, வடமேற்கு மாகாணங்கள், மத்திய இந்தியாவின் சில பகுதிகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

மகல்வாரி முறையின் சிறப்புக் கூறுகள்

✿ கிராமத்தலைவர் அரசுக்கும் கிராம மக்களுக்கும் இடையே இடைத்தரகராக செயல்பட்டார்.
✿ இது கிராமவாரியான மதிப்பீடாக இருந்தது. ஒரே நபர் பல கிராமங்களை தன் வசம் வைத்திருந்தார்.
✿ கிராம நிலங்களுக்கு கிராமத்தைச் சேர்ந்த சமுதாயத்தினரே உரிமையாளராக இருந்தனர்.

இம்முறையினால் ஏற்பட்ட விளைவுகள்

✿ கிராமத்தலைவர், சலுகைகளை தமது சொந்த விருப்பங்களின் அடிப்படையில் தவறாகப் பயன்படுத்தினார்.
✿ விவசாயிகளுக்கு இம்முறை லாபத்தைத் தரவில்லை.
✿ கிராமத்தின் உயர்வகுப்பினருக்கு லாபகரமாக இருந்தது.

103. பிரெஞ்சு இராணுவத்தின் மூலம் நவீனப் போர் முறைகளில் பயிற்சி பெற்றவர்:

A) மருது சகோதரர்கள் B) தீரன் சின்னமலை
C) பூலித் தேவர் D) வேலு நாச்சியார்

விடை : (B)

விளக்கம் :

தீரன் சின்னமலை (1756 – 1805)

கொங்குப்பகுதியில் பழையக்கோட்டை மன்றாடியார் பட்டம் பெற்ற மதிப்புமிகு குடும்பத்தில் பிறந்தவர் தீரன் என்ற தீர்த்தகிரியார். வில்வித்தை, சிலம்பு, குதிரையேற்றம், நவீன போர் முறைகளில் இவர் வல்லவராக இருந்தார். இவர் வாழ்ந்த கொங்குப் பகுதி மைசூர் சுல்தானின் கட்டுப்பாட்டில் இருந்தது. ஒருமுறை வரிவசூல் செய்த பணத்துடன் மைசூருக்குத் திரும்பிக் கொண்டிருந்த முகமது அலி என்பவரை தீர்த்தகிரி வழிமறித்து வரிப்பணம் முழுவதையும் பறித்துக் கொண்டார். "சிவமலைக்கும் சென்னிமலைக்கும் இடையே இருந்த 'சின்னமலை' வரிப்பணத்தைப் பிடுங்கிக் கொண்டதாக சுல்தானிடம் போய்ச் சொல்" என்றார். அதன்பிறகு தீரன் சின்னமலை என்றே அழைக்கப்பட்டு வந்தார்.

சுல்தானின் படைகளும் இவருடைய படைகளும் நொய்யல் ஆற்றங்கரையில் மோதிக்கொண்டன. அதில் தீரன் சின்னமலையே வெற்றிபெற்றார். பிரெஞ்சுக்காரர்களால் பயிற்சியளிக்கப்பட்ட இவர் கொங்கு மண்டலத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான இளைஞர்கள் மற்றும் திப்புவுடன் இணைந்து ஆங்கிலேயருக்கு எதிராகப் போராடினார். இவர் திப்புவின் இறப்பிற்குப் பிறகு கோட்டை ஒன்றைக் கட்டி, அதன் உள்ளிருந்தே போராட்டத்தைத் தொடர்ந்தார். எனவே அந்த இடம் 'ஓடாநிலை' என்று அழைக்கப்படுகிறது. கொரில்லா போர் முறையை இவர் கையாண்டார். இறுதியில் இவரது சமையல்காரரால் இவரும் இவரது சகோதரர்களும் ஆங்கிலேயரிடம் காட்டிக் கொடுக்கப்பட்டனர். 1805 ஜூலை 31 அன்று சங்ககிரிகோட்டையின் உச்சியில் அவர்கள் தூக்கிலிடப்பட்டனர்.

104. தட்சசீல பல்கலைக்கழக இடிபாடுகளை கண்டறிந்தவர்:

A) அலெக்சாண்டர் பர்னஸ்
B) சார்லஸ் மேசன்
C) அலெக்சாண்டர் கன்னிங்காம்
D) சர் ஜான் மார்ஷல்

விடை : (C)

விளக்கம் :

பண்டைய இந்திய நகரமாக இருந்த தட்சசீலம் தற்போது வடமேற்கு பாகிஸ்தானில் உள்ளது. முக்கியமான தொல்பொருள் ஆராய்ச்சிப் பகுதியான இதனை 1980-இல் யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளமாக அறிவித்தது. சாணக்கியர், 'அர்த்தசாஸ்திரம்' என்ற தனது நூலை இப்பல்கலைக்கழகத்தில் தங்கியிருந்து தொகுத்ததாகக் கூறப்படுகிறது. 19-ஆம் நூற்றாண்டின் மத்தியில் இப்பல்கலைக்கழகத்தின் இடிபாடுகளை தொல்பொருள் ஆராய்ச்சியாளர் அலெக்ஸாண்டர் கன்னிங்காம் கண்டறிந்தார்.

105. பெண்களுக்கான தேசிய ஆணையம் அமைக்கப்பட்ட ஆண்டு .....

A) ஜனவரி – 1992 B) ஜனவரி – 1993
C) மார்ச் – 1990 D) ஆகஸ்ட் – 1991

விடை : (A)

விளக்கம் :

பெண்களுக்கான தேசிய ஆணையம் :

இது ஜனவரி 1992-இல் அமைக்கப்பட்டது. பெண்கள் தொடர்பான சட்டங்களை மறு ஆய்வு செய்வது, பெண்களுக்கு எதிரான அநீதிகள் மற்றும் உரிமைகள் மறுப்பு குறித்த தனிப்பட்ட புகார்களில் தலையிடுவது இதன் முக்கியப் பணிகள் ஆகும்.

106. குப்த அரசர்களுக்கு ஆலோசனைக்கு உதவி புரிந்த அமைச்சர்கள் குழு எது?

A) விஷ்யபதி B) சமிதி
C) பதகா D) சபா

விடை : (D)

விளக்கம் :

குப்த வம்ச அரசர்களுக்கு நிர்வாகத்தில் ஆலோசனை வழங்க மற்றும் உதவி புரிய ஒரு வலுவான அமைச்சர்கள் குழு இருந்தது.

அலகாபாத் கல்வெட்டு:

புகழ்வாய்ந்த அலகாபாத் தூண் கல்வெட்டு, அரசருக்கு உதவியாக இருந்த 'சபா' என்ற குழுவைக் குறித்துக் குறிப்பிடுகிறது. இதுவே அமைச்சரவைக் குழுவாகச் செயல்பட்டிருக்கலாம் என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

107. ஆப்பிரிக்காவில் தோன்றி பின்னர் உலகத்தின் வெவ்வேறு பகுதிகளுக்கு இடம் பெயர்ந்த மனித இனத்தின் மூதாதையர்:

A) எலிபஸ் நமடிகஸ் B) போஸ் நமடிகஸ்
C) ஹோமோ எரக்டஸ் D) ஹோமினின்

விடை : (C)

விளக்கம் :

ஆப்பிரிக்காவில் தோன்றி, ஆசியா மற்றும் ஐரோப்பாவிற்கு முதன்முதலில் இடம்பெயர்ந்த மனித இனம் ஹோமோ எரக்டஸ் ஆவர்.

பெயரின் பொருள்:

'ஹோமோ எரக்டஸ்' என்றால் நிமிர்ந்து நேராக நடந்த மனிதன் என்று பொருளாகும்.

காலம்: இவர்கள் சுமார் 1.8 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பூமியில் வாழ்ந்தனர்.

முக்கியக் கண்டுபிடிப்புகள்:

கற்கருவிகளைப் பயன்படுத்தியதோடு, நெருப்பின் பயனை முதன்முதலில் கண்டறிந்த முன்னோடிகளும் இவர்களே.

108. கீழ்க்காணும் இணைகளை கவனிக்கவும்.

i) உஷா – பெண்கடவுள்
ii) பலி – வரி
iii) கிராமணி – படைத்தளபதி
iv) சமிதி – மக்கள் கூடும் இடம்

மேற்கண்டவற்றில் எந்த இணை தவறானது?

A) (i) B) (iv)
C) (ii) D) (iii)

விடை : (D)

விளக்கம் :

i) உஷா – பெண்கடவுள்: இது சரியான இணை. ரிக் வேத காலத்தில் 'உஷா' என்பது விடியற்காலைக்கான பெண் தெய்வத்தைக் குறிக்கும்.

ii) பலி – வரி: இது சரியான இணை. வேத காலத்தில் மக்கள் அரசனுக்குத் தானாகவோ அல்லது கட்டாயமாகவோ வழங்கிய வரி 'பலி' எனப்பட்டது.

iii) கிராமணி – படைத்தளபதி: இது தவறான இணை. வேத காலத்தில் கிராமத்தின் தலைவரே 'கிராமணி' என அழைக்கப்பட்டார். படைத்தளபதி 'சேனானி' என்று அழைக்கப்பட்டார்.

iv) சமிதி – மக்கள் கூடும் இடம்: இது சரியான இணை. வேத காலத்தில் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் கூடி விவாதிக்கும் பொதுச் சபை 'சமிதி' எனப்பட்டது.

109. கீழ்காணும் இணைகளை வாசித்து தவறான இணையை வெளிக் கொணர்க.

i) குறிஞ்சி – காடு சார்ந்த இடமாகும்
ii) பெருநற்கிள்ளி – ராஜசூயம்
iii) சேரர் – வஞ்சி
iv) பாலை – மணல் சார்ந்த வறண்ட நிலப்பகுதி

A) (ii) B) (iv)
C) (iii) D) (i)

விளக்கம் : **விடை : (D)**

i) குறிஞ்சி – காடு சார்ந்த இடமாகும் (தவறு):

சங்க இலக்கியத்தில் குறிஞ்சி என்பது மலையும் மலை சார்ந்த இடமும் ஆகும். காடும் காடு சார்ந்த இடமும் என்பது முல்லை நிலத்தைக் குறிக்கும். எனவே இந்த இணை தவறானது.

ii) பெருநற்கிள்ளி – ராஜசூயம் (சரி):

சோழ மன்னனான பெருநற்கிள்ளி 'ராஜசூயம்' என்ற யாகத்தை நடத்தியதால், அவன் 'ராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளி' என்று அழைக்கப்படுகிறான்.

iii) சேரர் – வஞ்சி (சரி): சேர அரசர்களின் தலைநகரம் வஞ்சி ஆகும்.

iv) பாலை – மணல் சார்ந்த வறண்ட நிலப்பகுதி (சரி)

110. கீழ்காணும் இணைகளை கவனிக்கவும்.

i) குஷாண அரசர் – சாகர்கள்
ii) முதல் சாக ஆட்சியாளர் – மௌஸ்
iii) காந்தராக் கலை – சீனா
iv) எரித்ரியக் கடலின் – மெகஸ்தனிஸ் பெரிப்ளஸ்

மேற்கண்டவற்றில் எந்த இணை சரியானது?

A) (i) B) (ii)
C) (iii) D) (iv)

விளக்கம் : **விடை : (B)**

i) குஷாண அரசர் –சாகர்கள் (தவறு):

குஷாணர்களும் சாகர்களும் மத்திய ஆசியாவிலிருந்து வந்த வெவ்வேறு வம்சங்களைச் சேர்ந்தவர்கள். குஷாண வம்சத்தின் மிக முக்கியமான அரசர் கனிஷ்கர் ஆவார்.

ii) முதல் சாக ஆட்சியாளர் மௌஸ் (சரி):

இந்தியத் துணைக் கண்டத்தில் ஆட்சியை சாகர்களின் நிலைநாட்டிய இந்தியாவின் முதல் சாக ஆட்சியாளர் மௌஸ் ஆவார். இவர் காந்தாரப் பகுதியைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார். எனவே, இந்த இணை சரியானது.

iii) காந்தாரக் கலை – சீனா (தவறு):

காந்தாரக் கலை என்பது கிரேக்க மற்றும் இந்தியக் கலை மரபுகள் இணைந்து உருவான ஒரு தனித்துவமான கலை வடிவமாகும். இதற்கும் சீனாவிற்கும் நேரடித் தொடர்பு இல்லை.

iv) எரித்திரியக் கடலின் பெரிப்ளஸ் –மெகஸ்தனிஸ் (தவறு):

'எரித்திரியக் கடலின் பெரிப்ளஸ்' (Periplus of the Erythraean Sea) என்ற கடற்பயண நூலை எழுதியவர் யார் என்று துல்லியமாகத் தெரியவில்லை. மெகஸ்தனிஸ் எழுதிய புகழ்பெற்ற வரலாற்று நூல் 'இண்டிகா' (Indica) ஆகும்.

111. நிர்வாக வரலாற்றை அறிய ஒரு சிறந்த ஆதாரதமாக நாணயங்கள் திகழ்கின்றன. நவீன இந்தியாவின் முதல் நாணயம் ..... ஆம் ஆண்டில் ஆங்கிலேய ஆட்சியில் வெளியிடப்பட்டது

A) 1861 B) 1862
C) 1863 D) 1964

விளக்கம் : **விடை : (B)**

ஒரு நாட்டின் நாணயங்கள் அந்த நாட்டின் பொருளாதார நிலை, நிர்வாகத் திறன் மற்றும் அரசர்களின் ஆட்சிக் காலம் ஆகியவற்றைத் துல்லியமாக அறிய உதவும் மிகச் சிறந்த வரலாற்று ஆதாரங்களாகும். 1857 பெரும் புரட்சிக்குப் பிறகு, இந்தியாவில் கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சி முடிவுக்கு வந்து, 1858–இல் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் நேரடி ஆட்சி தொடங்கியது. இந்த நேரடி ஆட்சியின் கீழ், 1862–ஆம் ஆண்டு விக்டோரியா மகாராணியின் உருவம் பொறிக்கப்பட்ட நவீன இந்தியாவின் முதல் நாணயம் வெளியிடப்பட்டது.

112. ..... ஆம் ஆண்டு ஜாம்ஷெட்பூர் என்ற இடத்தில் டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் (TISCO) அமைக்கப்பட்டது.

A) 1907 B) 1905
C) 1917 D) 1915

விளக்கம் : **விடை : (A)**

1907 ஆம் ஆண்டு ஜாம்ஷெட்பூர் என்ற இடத்தில் டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் (TISCO) அமைக்கப்பட்டது.

113. பொருத்துக:

பொருள்	நகரம்
a) சங்கு	(i) தெற்கு ராஜஸ்தான்
b) வைடூரியம்	(ii) லோத்தல்
c) கார்னிலியன்	(iii) நாகேஷ்வர் மற்றும் பாலகோட்
d) ஸ்டீட்டைட்	(iv) ஷார்டுகை

குறியீடுகள் :

	a)	b)	c)	d)
A)	1	2	3	4
B)	4	1	2	3
C)	2	4	1	3
D)	3	4	1	2

விளக்கம் : **விடை : (C)**

சிந்துவெளி நாகரிகத்தில் அணிகலன் செய்யப்பட்ட மூலப்பொருட்கள் மற்றும் உற்பத்தி மையங்கள்:

பொருள்கள்	உற்பத்தி மையங்கள்
சங்கு	நாகேஷ்வர், பாலகோட்
வைடூரியம்	ஷார்டுகை
கார்னிலியன் (மணி)	லோத்தல்
ஸ்டீட்டைட் (நுரைக்கல்)	தெற்கு ராஜஸ்தான்
செம்பு	ராஜஸ்தான், ஓமன்

114. பொருத்துக:

நிர்வாக அதிகாரிகள்	பதவி
a) பானு	(i) குதிரைப்படைத் தலைவர்
b) குந்தலா	(ii) ஆவணப் பதிவாளர்கள்
c) திர்கத் வஜர்	(iii) படைத் தளபதி
d) சிம்மானந்தா	(iv) அரச தூதுவர்

குறியீடுகள் :

	a)	b)	c)	d)
A)	4	1	2	3
B)	1	2	3	4
C)	2	1	4	3
D)	2	1	3	4

விளக்கம் : **விடை : (C)**

ஹர்ஷரின் முக்கிய நிர்வாக அதிகாரிகள்

பானு – ஆவணப் பதிவாளர்கள்
குந்தலா – குதிரைப் படைத்தலைவர்
திர்கத்வஜர் – அரச தூதவர்
சிம்மானந்தா – படைத் தளபதி
அவந்தி – அயலுறவு மற்றும் போர் விவகாரங்களுக்கான அமைச்சர்
மஹாபிரதிஹாரர் – அரண்மனைக் காவலர்களின் தலைவர்
சர்வகதர் – உளவுத்துறை அதிகாரி

115. மதராஸ் உயர்நீதிமன்றத்தின் முதல் இந்திய தலைமை நீதிபதி யார்?
A) சர் திருவாரூர் முத்துசாமி B) A.S. சுப்ரமணியன்
C) முருகானந்தம் D) குப்புசாமி
விளக்கம் : விடை : (A)
பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில், மதராஸ் உயர்நீதிமன்றத்தின் முதல் இந்திய நீதிபதியாக சர் திருவாரூர் முத்துசாமி ஐயர் அவர்கள் 1877–ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். பின்னர் 1893–ஆம் ஆண்டில், அவர் மதராஸ் உயர்நீதிமன்றத்தின் தற்காலிகத் தலைமை நீதிபதியாகப் பொறுப்பேற்றார். இதன் மூலம் இந்த உயரிய பதவியை வகித்த முதல் இந்தியர் என்ற பெருமையைப் பெற்றார்.

116. கீழ்க்காணும் தொடரில் தவறானவை எது?
A) 1803–ல் வில்லியம் காவெண்டிஷ் பெண்டிங் என்பவர் சென்னை மாகாண கவர்னரானார்
B) அவரது காலத்தில் 1805–1806ல் சில கட்டுப்பாடுகள் இராணுவத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது
C) அதனை பின்பற்ற வேண்டுமென இராணுவ வீரர்களுக்கு சென்னை மாகாண படைத்தளபதி சர் ஜான் கிராடாக் என்பவர் கட்டாயப்படுத்தினார்.
D) 1806ல் நடைபெற்ற வேலூர் கலகத்திற்கு இராணுவத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட என்பீல்டு ரக துப்பாக்கியே உடனடிக் காரணமாக இருந்தது.
விளக்கம் : விடை : (D)
1803–ல் வில்லியம் காவெண்டிஷ் பெண்டிங் சென்னை மாகாண கவர்னரானார். அவரது காலத்தில் (1805–1806) சென்னை மாகாண படைத்தளபதியான சர் ஜான் கிரடாக் புதிய இராணுவ கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்தி, அதை வீரர்கள் பின்பற்றுமாறு கட்டாயப்படுத்தினார்.
கூற்று D (தவறு): 1806–ல் நடைபெற்ற வேலூர் புரட்சிக்கு உடனடிக் காரணம் புதிய வகை தலைப்பாகை, வீரர்கள் நெற்றியில் சமயக் குறிகளை அணியக் கூடாது, தாடியைச் சவரம் செய்ய வேண்டும் போன்ற புதிய ஆடைக் கட்டுப்பாடுகளே ஆகும். வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள 'என்பீல்டு ரக துப்பாக்கி' 1857 ஆம் ஆண்டு நடைபெற்ற பெருங்கலகத்திற்கு உடனடிக் காரணமாக இருந்தது.

117. கீழ்க்கண்டவற்றை பொருத்துக:

a) பிரம்ம சமாஜம்	(i) 1867
b) பிரார்த்தனை சமாஜம்	(ii) 1828
c) ஆரிய சமாஜம்	(iii) 1889
d) சாரதா சதன்	(iv) 1875

குறியீடுகள் :

	a)	b)	c)	d)
A)	2	1	4	3
B)	2	1	3	4
C)	4	3	2	1
D)	2	4	3	1

விளக்கம் : விடை : (A)
பிரம்ம சமாஜம் – 1828 (ராஜா ராம் மோகன் ராய்)
பிரார்த்தனை சமாஜம் – 1867 (ஆத்மாராம் பாண்டுரங்)
ஆரிய சமாஜம் – 1875 (சுவாமி தயானந்த சரஸ்வதி)
சாரதா சதன் – 1889 (பண்டித ரமாபாய்)

118. கீழ்க்காணும் வாக்கியங்களில் தவறானவை எவை?
A) இந்து விதவைகள் மறுமணச் சட்டம், 1856
B) உள்நாட்டு திருமணச் சட்டம், 1872
C) சாரதா சட்டம், 1910
D) தேவதாசி ஒழிப்பு சட்டம், 1947
விளக்கம் : விடை : (C)
A) இந்து விதவைகள் மறுமணச் சட்டம், 1856: இது சரியான இணை. ஈஸ்வர சந்திர வித்யாசாகரின் பெரும் முயற்சியால் டல்ஹவுசி பிரபு மற்றும் கானிங் பிரபு காலத்தில் இந்தச் சட்டம் இயற்றப்பட்டது.
B) உள்நாட்டு திருமணச் சட்டம், 1872: இது சரியான இணை. கேசவ் சந்திர சென் மற்றும் பிரம்ம சமாஜத்தின் முயற்சியால் நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்டம் 'சிவில் திருமணச் சட்டம்' என்றும் அழைக்கப்படுகிறது.
C) சாரதா சட்டம், 1910: இது தவறான இணை. குழந்தை திருமணத்தைத் தடுப்பதற்காக கொண்டுவரப்பட்ட சாரதா சட்டம் 1929 ஆண்டு கொண்டு வரப்பட்டது (1910 என்பது தவறு).
D) தேவதாசி ஒழிப்புச் சட்டம், 1947: இது சரியான இணை. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியின் நீண்ட கால போராட்டத்திற்குப் பிறகு, 1947 அக்டோபர் 9 அன்று மதராஸ் மாகாணத்தில் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

119. இத்தாலியப் பயணி நிக்கோலோ கோண்டி எப்பொழுது விஜயநகரத்திற்கு வருகை புரிந்தார்?
A) 1413 B) 1417
C) 1411 D) 1420
விளக்கம் : விடை : (D)
விஜயநகரப் பேரரசிற்கு வருகைபுரிந்த அயல்நாட்டுப் பயணிகள்

பயணி	வருகைபுரிந்த ஆண்டு	நாடு
நிகோலோ கோண்டி	1420	இத்தாலி
அப்துர் ரஸாக்	1443	மத்திய ஆசியாவின் ஹீரட் நகர் (செங்கிஸ்கானின் அரசவை இருந்த இடம்)
டோமிங்கோ பயஸ்	1522	போர்த்துகீசியம்

120. இந்தியாவில் இடைப்பழங்கற்காலத்தை முதலில் அடையாளம் கண்டவர்
A) H.D.சங்கலியா B) சார்லஸ் மேசன்
C) அலெக்ஸாண்டர் பர்னஸ் D) சர் ஜான் மார்ஷல்
விளக்கம் : விடை : (A)
இந்தியாவில் இடைப்பழங்கற்காலப் பண்பாட்டை (Middle Palaeolithic Phase) முதன்முதலில் கண்டறிந்து வகைப்படுத்தியவர் புகழ்பெற்ற தொல்பொருள் ஆய்வாளர் எச்.டி. சங்கலியா ஆவார். மகாராஷ்டிராவின் பிரவரா ஆற்றங்கரையில் அமைந்துள்ள நெவாசா என்ற இடத்தில் இவர் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சியின் மூலமே இது கண்டறியப்பட்டது. இவருடைய கண்டுபிடிப்பால், இந்தியாவின் இடைப்பழங்கற்காலக் கருவிகள் மற்றும் பண்பாடு 'நெவாசியன் பண்பாடு' என்றும் அழைக்கப்படுகிறது.

121. பேரண்டம் விரிவடைந்து கொண்டிருப்பதற்கான ஆதாரங்களை முன்வைத்தவர் யார்?
A) லாப்லேஸ் B) இம்மானுவேல் காண்ட்
C) அபே ஜார்ஜ் லேமட்ரே D) எட்வின் ஹப்பிள்
விளக்கம் : விடை : (D)
அமெரிக்க வானியலாளரான எட்வின் ஹப்பிள் 1929ஆம் ஆண்டில் பேரண்டம் தொடர்ந்து விரிவடைந்து கொண்டே இருக்கிறது என்பதற்கான கண்காணிப்பு ஆதாரத்தை வழங்கினார். இது 'ஹப்பிள் விதி' (Hubble's Law) என்றும் அழைக்கப்படுகிறது. அபே ஜார்ஜ் லேமட்ரே , பேரண்டம் விரிவடைகிறது என்ற கோட்பாட்டை கணித ரீதியாக முன்மொழிந்தவர். லாப்லேஸ் மற்றும் இம்மானுவேல் காண்ட் சூரிய குடும்பத்தின் தோற்றம் குறித்த 'நெபுலார் கோட்பாடு, விண்வெளி சார்ந்த ஆரம்பகாலக் கொள்கைகளை வகுத்தவர்கள்

122. உலகின் மிகப்பெரிய கடல்காற்று பண்ணை ..... ஆகும்.
A) அல்டாமவுன்ட் B) இலண்டன் அர்ரே
C) லா ரென்ஸி D) சிஹுவா ஏரி
விளக்கம் : விடை : (B)
இலண்டன் அர்ரே : இது ஐக்கிய இராச்சியத்தில் (UK) தேம்ஸ் நதி முகத்துவாரத்தில் அமைந்துள்ள ஒரு மிகப்பெரிய கடற்காற்று பண்ணை

ஆகும். இக்கேள்வி கேட்கப்பட்ட பாடப்புத்தகக் காலகட்டத்தின்படி, இதுவே உலகின் மிகப்பெரிய கடற்காற்றுப் பண்ணையாகக் கருதப்பட்டது. தற்போது உலகின் மிகப்பெரிய கடல் காற்று பண்ணை இங்கிலாந்து நாட்டின் வடகடலில் அமைந்துள்ள டாகர் பேங்க் காற்றாலை பண்ணை (Dogger Bank Wind Farm) ஆகும்.

123. பொருத்துக:

a)	இந்திய நிலக்கரி நிறுவனம்	(i) புதுடெல்லி
b)	இந்திய அணுமின்சக்தி நிறுவனம்	(ii) ஃபரிதாபாத்
c)	இந்திய தேசிய நீர்மின்சக்தி நிறுவனம்	(iii) மும்பை
d)	இந்திய சூரிய சக்தி நிறுவனம்	(iv) கொல்கத்தா

குறியீடுகள் :

	a)	b)	c)	d)
A)	2	4	1	3
B)	2	1	4	3
C)	3	4	1	2
D)	4	3	2	1

விளக்கம் : **விடை : (D)**

நிறுவனம்	தலைமையகம்
இந்திய நிலக்கரி நிறுவனம்	கொல்கத்தா
இந்திய அணுமின்சக்தி நிறுவனம்	மும்பை
இந்திய தேசிய நீர்மின்சக்தி நிறுவனம்	ஃபரிதாபாத்
இந்திய சூரிய சக்தி நிறுவனம்	புதுடெல்லி

124. கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களை கருத்தில் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு:

வாக்கியம் (I) : மின்னல் வெளிப்படும்போது அதன் வெப்பம் 9882.2° செல்சியஸ்

வாக்கியம் (II) : ஒரு இடி மின்னல் பாய்வின் சராசரி நீளம் 1 முதல் 2 கி.மீ. ஆகும்

A) வாக்கியம் (I) தவறானது வாக்கியம் (II) சரியானது

B) வாக்கியம் (I) சரியானது வாக்கியம் (II) தவறானது

C) வாக்கியம் (I) மற்றும் (II) சரியானது

D) வாக்கியம் (I) மற்றும் (II) சரியானது

விளக்கம் : **விடை : (D)**

வாக்கியம் (I): மின்னல் வெளிப்படும்போது அதன் வெப்பம் 9882.2° செல்சியஸ்.

மின்னலின் சராசரி வெப்பம் சுமார் 30,000° செல்சியஸ் (54,000° ஃபாரன்ஹீட்) ஆகும். இது சூரியனின் மேற்பரப்பு வெப்பநிலையை விட ஐந்து மடங்கு அதிகம். எனவே, கொடுக்கப்பட்ட அளவு தவறானது.

வாக்கியம் (II) : ஒரு இடி மின்னல் பாய்வின் சராசரி நீளம் 1 முதல் 2 கி.மீ. ஆகும்.

ஒரு சாதாரண மின்னல் கீற்றின் சராசரி நீளம் சுமார் 3 முதல் 4 கி.மீ. ஆகும். சில சமயங்களில் இது பல கிலோமீட்டர் நீளம் வரை நீளக்கூடும். எனவே, 1 முதல் 2 கி.மீ. என்பது தவறான அளவீடாகும்.

125. பொருத்துக:

a)	முதன்மை பொருளாதார நடவடிக்கைகள்	(i) நூற்பாலைகள்
b)	இரண்டாம் நிலை பொருளாதார நடவடிக்கைகள்	(ii) கல்வி
c)	மூன்றாம் நிலை பொருளாதார நடவடிக்கைகள்	(iii) ஆராய்ச்சி
d)	நான்காம் நிலை பொருளாதார நடவடிக்கைகள்	(iv) வேட்டையாடுதல்

குறியீடுகள் :

	a)	b)	c)	d)
A)	4	1	2	3
B)	3	2	1	4
C)	2	1	4	3
D)	4	2	3	1

விளக்கம் : **விடை : (A)**

(a) முதன்மை பொருளாதார நடவடிக்கைகள் – (iv) வேட்டையாடுதல்

இயற்கையிலிருந்து நேரடியாக வளங்களை சேகரிக்கும் நடவடிக்கைகளான வேட்டையாடுதல், விவசாயம், மீன்பிடித்தல் ஆகியவை இதில் அடங்கும்.

(b) இரண்டாம் நிலை பொருளாதார நடவடிக்கைகள் – (i) நூற்பாலைகள் மூலப்பொருட்களை உற்பத்திப் பொருட்களாக மாற்றும் தொழில்கள் (தொழிற்சாலைகள்) ஆகும். பருத்தியை நூலாக மாற்றும் நூற்பாலைகள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

(c) மூன்றாம் நிலை பொருளாதார நடவடிக்கைகள் – (ii) கல்வி

மக்களுக்குச் சேவைகளை வழங்கும் சேவைத்துறை மூன்றாம் நிலை பொருளாதார நடவடிக்கைகள் ஆகும். கல்வி, போக்குவரத்து, வங்கி மற்றும் வணிகம் ஆகியவை இதில் அடங்கும்.

(d) நான்காம் நிலை பொருளாதார நடவடிக்கைகள் – (iii) ஆராய்ச்சி

அறிவு சார்ந்த மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த உயர்மட்ட சேவைகள் ஆகும். புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் அறிவியல் ஆராய்ச்சிகள் இதில் அடங்கும்.

126. எது சரியான (உலகின் மாநகர மக்கள் தொகை)?

A) டோக்கியோ – 40 மில்லியன்

B) டெல்லி – 29 மில்லியன்

C) ஷாங்காய் – 35 மில்லியன்

D) மெக்ஸிகோ – 50 மில்லியன்

விளக்கம் : **விடை : (B)**

ஐக்கிய நாடுகள் சபையின் (UN) தரவுகளின்படி, உலகின் முக்கிய பெருநகரங்களின் தோராயமான மக்கள் தொகை பின்வருமாறு கணக்கிடப்பட்டுள்ளது.

டெல்லி (இந்தியா): சுமார் 29 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்டுள்ளதால் இக்கூற்று முற்றிலும் சரியானது.

டோக்கியோ (ஜப்பான்): இதன் மக்கள் தொகை சுமார் 37 மில்லியன் ஆகும்.

ஷாங்காய் (சீனா): இதன் மக்கள் தொகை சுமார் 26 மில்லியன் ஆகும்

மெக்ஸிகோ நகரம் (மெக்சிகோ): இதன் மக்கள் தொகை சுமார் 22 மில்லியன் ஆகும்.

127. கீழ்கண்டவற்றில் தவறான கூற்று எது?

A) சூரியனுக்கு மிக அருகில் உள்ள கோள் புதன் ஆகும்

B) இது சூரியனை ஒருமுறை வலம் வர 88 புவி நாட்கள் எடுத்துக் கொள்கிறது

C) சூரிய ஒளி புதனை சென்றடைய 5.2 நிமிடங்கள் எடுத்துக் கொள்கிறது

D) இது சூரிய குடும்பத்தின் இரண்டாவது வெப்பமான கோளாகும்

விளக்கம் : **விடை : (C)**

நமது சூரியக் குடும்பத்தில் சூரியனுக்கு மிக அருகில் அமைந்துள்ள முதல் கோள் புதன் (Mercury) ஆகும். இது ரோமானியக் கடவுள்களின் தூதுவரான 'மெர்க்குரி'யின் பெயரால் அழைக்கப்படுகிறது. நீர் மற்றும் வாயு இக்கோளில் கிடையாது. வளிமண்டலம் இக்கோளில் இல்லாததால் பகலில் அதிக வெப்பமும் இரவில் கடுங்குளிரும் நிலவுகிறது. இதற்கு துணைக்கோள் எதுவும் இல்லை. அதிகாலையிலும் அந்திப் பொழுதிலும் இக்கோளை நாம் வெறும் கண்களால் காணமுடியும். புதன் கோள் சூரியனுக்கு மிக அருகில் இருப்பதால், அதன் சுற்றுப்பாதை மிகச் சிறியது. அது சூரியனை ஒரு முறை முழுமையாகச் சுற்றி வர 88 நாட்கள் மட்டுமே எடுத்துக் கொள்கிறது. சூரிய ஒளி புதன் கோளைச் சென்றடைய சுமார் 3.2 நிமிடங்கள் மட்டுமே ஆகும். எனவே கூற்று (C) தவறாகும்.

சூரியனுக்கு மிக அருகில் புதன் இருந்தாலும், அதற்கு வெப்பத்தைத் தக்கவைக்க வளிமண்டலம் இல்லை. இதனால், கார்பன்–டை–ஆக்சைடு நிறைந்த அடர்த்தியான வளிமண்டலம் கொண்ட வெள்ளி கோள் தான் சூரியக் குடும்பத்தின் மிக வெப்பமான கோளாகும்.

128. பொருத்துக:

a) மங்கோலாய்டு	(i) நியூகினியா
b) காகசாய்டு	(ii) ஆப்பிரிக்காவின் துணை சஹாரா
c) ஆஸ்ட்ராலாய்டு	(iii) ஐரோப்பா
d) நீக்ராய்டு	(iv) கிழக்கு ஆசியா

கீழே கொடுக்கப்பட்டுள்ளவைகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு:

குறியீடுகள் :

	a)	b)	c)	d)
A)	3	4	1	2
B)	4	3	1	2
C)	1	3	2	4
D)	1	2	3	4

விடை : (B)

விளக்கம் :

மங்கோலாய்டு – கிழக்கு ஆசியா

இவர்கள் பெரும்பாலும் கிழக்கு ஆசியா மற்றும் தென்கிழக்கு ஆசியப் பகுதிகளில் வாழ்கின்றனர்.

காகசாய்டு – ஐரோப்பா

ஐரோப்பிய இனத்தவர்கள் காகசாய்டு என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் ஐரோப்பா மற்றும் வட ஆப்பிரிக்காவில் பரவியுள்ளனர்.

ஆஸ்திரலாய்டு – நியூகினியா

இந்த இன மக்கள் ஆஸ்திரேலியா மற்றும் நியூகினியா போன்ற தீவுப் பகுதிகளில் அதிகமாக வாழ்கின்றனர்.

நீக்ராய்டு – ஆப்பிரிக்காவின் துணை சஹாரா

ஆப்பிரிக்காவின் சஹாரா பாலைவனத்திற்குத் தெற்கே உள்ள பகுதிகளில் (துணை சஹாரா) வாழும் பூர்வகுடி மக்கள் இந்த இனத்தைச் சேர்ந்தவர்கள்.

129. ஒரு குறிப்பிட்ட இடத்தின் எல்லைகள் மற்றும் நில உடமைகள் பற்றிய விவரங்களை காண்பிக்க ..... பயன்படுகின்றன.

A) கருத்துப் படங்கள் B) நிலத்தோற்றப் படங்கள்
C) கலாச்சாரப் படங்கள் D) காணிப்புவிப் படங்கள்

விடை : (D)

விளக்கம் :

ஒரு குறிப்பிட்ட பகுதியின் நில எல்லைகள், நில அளவைகள் மற்றும் தனிநபர்கள் அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான நில உடமைகள் பற்றிய துல்லியமான மற்றும் விரிவான விபரங்களைக் காண்பிப்பதற்காக காணிப்புவிப் படங்கள் (Cadastral maps) பயன்படுத்தப்படுகின்றன. இவை பொதுவாக உள்ளூர் நில நிர்வாகம், சொத்து வரி வசூல் மற்றும் நில உரிமை தொடர்பான சட்டப்பூர்வ விவகாரங்களுக்கு முதன்மையாகப் பயன்படுகின்றன.

130. பின்வருவனவற்றுள் எது தவறாக பொருந்தியுள்ளது?

A) வோல்க ஆறு – காஸ்பியன் கடல்
B) ரைன் ஆறு – வடக்கு கடல்
C) டேன்யூப் ஆறு – கருங்கடல்
D) தேம்ஸ் ஆறு – மத்திய தரைக் கடல்

விடை : (D)

விளக்கம் :

தேம்ஸ் ஆறு இங்கிலாந்தில் பாய்ந்து வடக்கு கடலில் கலக்கிறது. இது மத்திய தரைக்கடலில் கலப்பதில்லை.

131. எந்த ஒன்று சரியான பொருந்துகிறது?

A) ஜொராஸ்டிரியனிசம் – அகியாரி
B) ஜெய்னிஸம் – விஹாரா
C) ஜூடாய்ஸம் – பசாதி
D) புத்திஸம் – சினகாக்

விடை : (A)

விளக்கம் :

ஜொராஸ்ட்ரியனிசம் –அகியாரி

ஜோராஸ்ட்ரிய மதத்தைப் பின்பற்றுபவர்களின் வழிபாட்டுத் தலம் அகியாரி அல்லது நெருப்புக் கோயில் (Fire Temple) என்று அழைக்கப்படுகிறது. எனவே இந்த இணை சரியாகப் பொருந்துகிறது.

ஜெயினிசம் –விஹாரா

சமண மதத்தின் (ஜெயினிசம்) வழிபாட்டுத் தலம் பசாதி (Basadi) அல்லது தெராசர் (Derasar) அழைக்கப்படும். விஹாரா என்பது பௌத்த துறவிகளின் தங்குமிடமாகும்.

ஜூடாயிசம் – பசாதி

யூத மதத்தின் (Judaism) வழிபாட்டுத் தலம் சினகாக் ஆகும்.

புத்திஸம் – சினகாக்

பௌத்த மதத்தின் வழிபாட்டுத் தலம் பொதுவாக விகாரை (Vihara) அல்லது ஸ்தூபி என்று அழைக்கப்படும்.

132. ஒரு கடல் மைல் என்பது ..... மீட்டருக்கு சமமாகும்

A) 1852 B) 1752
C) 1652 D) 1952

விடை : (A)

விளக்கம் :

கடல் மைல் (Nautical Mile):

கடல் மற்றும் வான்வழிப் போக்குவரத்தில் தூரத்தை அளவிடப் பயன்படும் ஒரு சர்வதேச அலகு ஆகும். சர்வதேச தரநிலையின்படி, ஒரு கடல் மைல் என்பது சரியாக 1852 மீட்டருக்கு சமமாகும்.

133. தேசிய வனவிலங்கு வாரியத்தின் தலைவர் .....

A) இந்திய ஜனாதிபதி
B) இந்திய பிரதமர்
C) உயர்நீதிமன்ற நீதிபதி சென்னை
D) தமிழ்நாடு முதலமைச்சர்

விடை : (B)

விளக்கம் :

தேசிய வனவிலங்கு வாரியம் (National Board for Wildlife – NBWL) ஒரு சட்டரீதியான அமைப்பு. வனவிலங்கு பாதுகாப்பு குறித்த கொள்கைகளை இவ்வாரியம் வகுக்கிறது. இந்த வாரியத்தின் தலைவராக இந்தியப் பிரதமர் பதவி வகிப்பார். இதன் துணைத் தலைவராக மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் இருப்பார்.

134. பின்வரும் வாக்கியங்களில் அண்டார்டிக் பெருங்கடல் பற்றி தவறான வாக்கியம் எது?

A) தென் பெருங்கடல் உலகின் நான்காவது பெரிய கடலாகும்.
B) 40 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் உலகின் பெருங்கடல்களில் சமீபத்தில் தோன்றியதாகும்.
C) அண்டார்டிக் பெருங்கடலின் மிக குளிர்ச்சியான நீரும் வெதுவெதுப்பான துணை அண்டார்டிக் நீரும் கலக்கும் இடத்தில்தான் பெருங்கடலின் எல்லைக் காணப்படுகிறது.
D) கோடைக்காலத்தில் தென் கோளத்தில் தென் பெருங்கடலின் பாதிப்பகுதி பனிப்படலம் மற்றும் பனிப் பாறைகளால் மூடப்பட்டிருக்கிறது.

விடை : (B)

விளக்கம் :

புவியியல் சான்றுகளின்படி, தென் பெருங்கடல் (அண்டார்டிக் பெருங்கடல்) சுமார் 34 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு அண்டார்டிக்கா மற்றும் தென் அமெரிக்க கண்டங்கள் பிரிந்தபோது உருவானது. கேள்வியில் மற்றும் 40 மில்லியன் வருடங்கள் எனக் கொடுக்கப்பட்டுள்ளதால் இது தவறான வாக்கியமாகும்.

135. கப்லோட்டிகள் 19ம் நூற்றாண்டில் ..... கடிகாரத்தை அதிக அளவில் பயன்படுத்தினர்

A) சூரியக் கடிகாரம் B) நீர்கடிகாரம்
C) காலக்கடிகாரம் D) ஊசல் கடிகாரம்

விடை : (C)

விளக்கம் :

19–ஆம் நூற்றாண்டில் கடலில் பயணம் செய்த கப்பலோட்டிகள் துல்லியமாக நேரத்தைக் கணக்கிடவும், அதன் மூலம் தங்களின் இருப்பிடத்தின் தீர்க்கரேகையைக் (Longitude) கண்டறியவும்

காலக்கடிகாரத்தை அதிக அளவில் பயன்படுத்தினர். கடல் பயணங்களின் போது ஏற்படும் அலைகள் மற்றும் வெப்பநிலை மாற்றங்களால் சாதாரண கடிகாரங்கள் அல்லது ஊசல் கடிகாரங்கள் துல்லியமான நேரத்தைக் காட்ட முடியாது.

136. பின்வருவனவற்றுள் எது மின்னல் வருமுன்னுக்கான செயல்விதி?

A) மின்னலின் போது குடை பிடித்துக் கொண்டு செல்லக் கூடாது
B) உங்களின் நுரையீரலைப் பாதுகாத்துக் கொள்ள ஒரு ஈரத் துணியைக் கொண்டு வாயை மூடிக் கொள்ளவும்
C) மின்னல் உருவாகும் என்று தெரிந்தால் உங்கள் பயணத்தை முடிந்தளவு தள்ளிப் போடவும்
D) மின்னலின் பொழுது குளிக்கக்கூடாது ஏனெனில் தண்ணீர்க் குழாய்கள் வழியே மின்னல் ஊடுருவ வாய்ப்பிருக்கிறது

விளக்கம் : **விடை : (C)**

மின்னல் அல்லது இடி புயல் வரப்போகிறது என்று முன்கூட்டியே தெரிந்தால், பாதுகாப்பற்ற வெளிப்புறப் பயணங்களைத் தவிர்ப்பது அல்லது தள்ளிப்போடுவதுதான் மிகச்சிறந்த முதல் கட்ட பாதுகாப்பு விதி ஆகும்.

137. பின்வருவனவற்றுள் எது ஆப்பிரிக்கா கண்டத்தில் உள்ள பன்னாட்டு விமான நிலையம் அல்ல?

A) நைரோபி B) மாண்ட்ரீல்
C) டர்பன் D) காஸாபிளாங்கா

விளக்கம் : **விடை : (B)**

கொடுக்கப்பட்டுள்ள விருப்பங்களில், மாண்ட்ரீல் சர்வதேச விமான நிலையம் வட அமெரிக்க கண்டத்தில் உள்ள கனடா நாட்டில் அமைந்துள்ளது. எனவே, இது ஆப்பிரிக்க கண்டத்தில் இல்லை. மற்ற மூன்று விருப்பங்களும் ஆப்பிரிக்க கண்டத்தில் உள்ள முக்கிய சர்வதேச விமான நிலையங்கள் ஆகும்.

நைரோபி (Nairobi) கிழக்கு ஆப்பிரிக்காவில் உள்ள கென்யா நாட்டின் தலைநகர சர்வதேச விமான நிலையமாகும்.

டர்பன் (Durban) தென்னாப்பிரிக்க நாட்டில் அமைந்துள்ள ஒரு முக்கிய சர்வதேச விமான நிலையமாகும்.

காஸாபிளாங்கா (Casablanca) வட ஆப்பிரிக்காவில் உள்ள மொராக்கோ நாட்டின் மிகப்பெரிய சர்வதேச விமான நிலையம் ஆகும்.

138. கீழ்கண்டவற்றுள் எது ஆசியாவில் காணப்படாத சமவெளி?

A) மஞ்சூரியன் சமவெளி B) சிந்து–கங்கைச் சமவெளி
C) அண்டலூசியா சமவெளி D) மெசபடோமிய சமவெளி

விளக்கம் : **விடை : (C)**

அண்டலூசியா சமவெளி (Andalusia Plain) ஐரோப்பா கண்டத்தில் உள்ள ஸ்பெயின் நாட்டில் அமைந்துள்ளது.

மஞ்சூரியன், சிந்து–கங்கை மற்றும் மெசபடோமியா ஆகிய மற்ற மூன்று சமவெளிகளும் ஆசிய கண்டத்தில் அமைந்துள்ளன.

139. தமிழ் நாட்டில் உள்ள எந்த ஒரு மாவட்டத்தில் தாழையார் நீர்வீழ்ச்சி அமைந்துள்ளது?

A) தேனி B) திருநெல்வேலி
C) திண்டுக்கல் D) கன்னியாகுமரி

விளக்கம் : **விடை : (C)**

தாழையார் நீர்வீழ்ச்சி, திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் மலைப்பகுதியில் உள்ள பழனி மலைத் தொடரின் சரிவுகளில் அமைந்துள்ளது. இது 975 அடி (297 மீட்டர்) உயரம் கொண்டது. இது தமிழ்நாட்டின் மிக உயரமான நீர்வீழ்ச்சியாகும் மற்றும் இந்தியாவின் ஆறாவது மிக உயரமான நீர்வீழ்ச்சியாகக் கருதப்படுகிறது. இந்த அருவி தூரத்திலிருந்து பார்க்கும்போது எலியின் வால் போல மெலிதாகத் தெரிவதால், இதற்கு எலி வால் நீர்வீழ்ச்சி (Rat Tail Falls) என்ற மற்றொரு பெயரும் உண்டு.

140. பொருத்துக.

பட்டியல் – I	பட்டியல் – II
a) பில்ஸ்கள்	1. ராஜஸ்தான்
b) சாந்தலர்கள்	2. மேற்கு வங்காளம்
c) அங்காமி	3. நாகலாந்து
d) பூட்டியா	4. சிக்கிம்

கீழே கொடுக்கப்பட்டுள்ளவைகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு:

குறியீடுகள் :

	a)	b)	c)	d)
A)	3	4	1	2
B)	1	2	3	4
C)	3	2	1	4
D)	4	1	2	3

விளக்கம் : விடை : (B)

பில்ஸ்கள் (Bhils)

* இவர்கள் இராஜஸ்தானின் பிரபலமான **வில்மனிதர்கள்** என அறியப்படுகிறார்கள். இந்தியாவில் மிகவும் பரவலாகக் காணப்படும் இவர்கள் தெற்காசியாவின் மிகப்பெரிய பழங்குடியினர் ஆவர்.
* 'மத்திய அல்லது தூய பில்ஸ்' மற்றும் 'கிழக்கத்திய அல்லது ராஜபுத்திர பில்ஸ்' என்பது இக்குழுவின் இரண்டு பிரிவுகளாகும்.

சாந்தலர்கள் (Santhals)

* இந்தியாவின் மூன்றாவது பெரிய பழங்குடியினரான இவர்கள் பெரும்பாலும் மேற்கு வங்காளம், பீஹார், ஒடிஸா, ஜார்கண்ட் மற்றும் அசாம் மாநிலங்களில் காணப்படுகின்றனர்.
* முந்தைய ஆரிய காலத்தைச் சேர்ந்த இவர்கள் பிரிட்டிஷ் காலத்தில் பெரும் போராளிகளாக இருந்துள்ளனர்.

அங்காமி (Angami)

* நாகலாந்து மாநிலத்தின் வடகிழக்குப் பகுதியின் கடைகோடியில் காணப்படும் இவர்களின் மொத்த மக்கள்தொகை சுமார் 12 மில்லியின் ஆகும். மரத்தாலான கைவினை மற்றும் கலைப்படைப்புகளில் பிரபலமானவர்கள். **'சீக்ரேனி'** என்பது இவர்களால் கொண்டாடப்படும் முக்கியத் திருவிழாவாகும்.

பூட்டியா (Bhutia)

* திபெத்திய மரபுகளில் தோன்றிய இவர்கள் 16–ஆம் நூற்றாண்டில் சிக்கிம் பகுதிக்குக் குடிபெயர்ந்தனர். **லாச்சேன்பாஸ்** (Lachenpas) மற்றும் **லாச்சுங்பாஸ்** (Lachungpas) என்ற பெயரில் சிக்கிமின் வடபகுதியில் அறியப்படும் இவர்கள், சிக்கிமின் மொத்த மக்கள்தொகையில் 14% ஆவர். லாசர் (Losar) மற்றும் லாசூங் (Lasoong) என்பவை இவர்களால் கொண்டாடப்படும் முக்கியத் திருவிழாக்களாகும்.

141. 1954–ல் காமராஜர் அமைச்சரவையில் கல்வி அமைச்சராக இருந்தவர் யார்?

A) சி. சுப்பிரமணியம் B) சி. இராஜாஜி
C) சங்கரலிங்கனார் D) ஜீவானந்தம்

விளக்கம் : **விடை : (A)**

1954 ஆம் ஆண்டு கு. காமராஜர் மெட்ராஸ் மாகாண முதல்மைச்சராகப் பொறுப்பேற்ற போது, அவரது அமைச்சரவையில் கல்வி மற்றும் நிதி அமைச்சராக சி. சுப்பிரமணியம் பணியாற்றினார். காமராஜர் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் தொடக்கக் கல்விப் புரட்சி மற்றும் மதிய உணவுத் திட்டம் போன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்கள் செயல்படுத்தப்பட்ட போது, இவரே கல்வித் துறையை வழிநடத்தினார்.

142. சமூகம் என்று ஒன்று கிடையாது. தனி ஆண்கள், பெண்கள் மற்றும் குடும்பங்கள் மட்டுமே உள்ளன என்று கூறியவர்

A) பிரெட்ரிக் ஹேயக் B) பிரான்சிஸ் புக்கியோமா
C) மார்கரெட் தாட்சர் D) ஜோசப் ஸ்டாலின்

விளக்கம் : **விடை : (C)**

சமூகம் என்று ஒன்று கிடையாது. தனி ஆண்கள், பெண்கள் மற்றும் குடும்பங்கள் மட்டுமே உள்ளன' என்று கூறியவர் பிரிட்டன் நாட்டின் முன்னாள் பிரதமர் மார்கரெட் தாட்சர் ஆவார். 1987 ஆம் ஆண்டு 'வுமன்ஸ் ஓன்' (Woman's Own) என்ற இதழுக்கு அளித்த பேட்டியின் போது அவர்

இதைக் கூறினார். தனிமனிதர்களின் பொறுப்புணர்வை வலியுறுத்தவும், அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அரசையே அல்லது சமூகத்தையே குறை கூறக்கூடாது என்பதை விளக்கவுமே அவர் இக்கருத்தைத் தெரிவித்தார்.

143. கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளை மதிப்பீடு செய்யவும்.

கூற்று (A) : அணிசேராமை என்ற சொல் ஜவஹர்லால் நேரு என்பவரால் உருவாக்கப்பட்டது

கூற்று (R) : அணிசேராமை என்பது இந்திய வெளியுறவு மற்றும் உள்நாட்டு கொள்கையின் முக்கிய அம்சமாகும்.

A) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது
B) (A) மற்றும் (R) இரண்டும் தவறானது
C) (A) சரியானது (R) தவறானது
D) (A) தவறானது (R) சரியானது

விளக்கம் : **விடை : (B)**

கூற்று (A) தவறு :

'அணிசேராமை' (Non-Alignment) என்ற சொல்லை முதன்முதலில் 1953-ல் ஐநா சபையில் உரையாற்றிய வி.கே. கிருஷ்ணமேனன் என்பவர் தான் உருவாக்கினார்.

இந்தியாவின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேரு இக்கொள்கையைப் பிரபலப்படுத்தினார்.

காரணம் (R) தவறு :

அணிசேராமை என்பது இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் மிக முக்கிய அம்சமாகும். ஆனால், இது உள்நாட்டு கொள்கையின் முக்கிய அம்சம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, காரணம் (R)-ம் தவறானது.

144. ஒரு கட்சி தேசியக்கட்சி என கருதபடுவதற்கு எந்த ஒரு வாக்கியம் பின்வருவனவற்றுள் தவறானது?

A) மக்களவை தேர்தலில் நான்கு மாநிலங்களுக்கான சட்டமன்ற தேர்தலில் செல்லத்தக்க மொத்த வாக்குகளில் ஒரு 6% வாக்குகளை பெற்று இருத்தல் வேண்டும்
B) ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட மாநிலங்களில் நான்கு மக்களவை தொகுதிகளில் வெற்றி பெற்றிருத்தல் வேண்டும்.
C) இறுதியாக நடைப்பெற்ற மக்களவை தேர்தலில் குறைந்தபட்சம் மூன்று மாநிலங்களில் 2% வெற்றி பெற்றிருத்தல் வேண்டும்
D) சட்டமன்றத் தேர்தலில் குறைந்த பட்சம் இரண்டு தொகுதிகளில் வெற்றி பெற்றிருத்தல் வேண்டும்.

விளக்கம் : **விடை : (D)**

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் விதிகளின்படி, ஒரு அரசியல் கட்சி தேசியக் கட்சியாக (National Party) அங்கீகரிக்கப்பட வேண்டிய தகுதிகளில் கடைசி வாக்கியம் தவறானது ஆகும்.

சரியான விதிகள்:

6% வாக்குகள்: மக்களவை அல்லது சட்டமன்றத் தேர்தலில், ஏதேனும் 4 மாநிலங்களில் பதிவான செல்லத்தக்க வாக்குகளில் 6% வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும்.

4 மக்களவை இடங்கள்: ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களில் இருந்து குறைந்தபட்சம் 4 மக்களவை தொகுதிகளில் வெற்றி பெற்றிருக்க வேண்டும்.

2% இடங்கள்: இறுதியாக நடந்த மக்களவை தேர்தலில், குறைந்தபட்சம் 3 வெவ்வேறு மாநிலங்களில் இருந்து 2% இடங்களை வென்றிருக்க வேண்டும்.

தவறான வாக்கியத்திற்கான காரணம்:

"சட்டமன்றத் தேர்தலில் குறைந்தபட்சம் இரண்டு தொகுதிகளில் வெற்றி பெற்றிருத்தல் வேண்டும்" என்பது ஒரு கட்சி மாநிலக் கட்சியாக அங்கீகாரம் பெறுவதற்கான நிபந்தனைகளில் ஒன்றாகும். இது தேசியக் கட்சி தகுதிக்கு பொருந்தாது என்பதால், இந்த வாக்கியம் தவறானது.

145. சாலை போக்குவரத்து துறை குழந்தைகளுக்காக எத்தனை புத்தகங்களை வெளியிட்டது?

A) 4 B) 3
C) 2 D) 1

விளக்கம் : **விடை : (C)**

சாலை போக்குவரத்து துறை குழந்தைகளுக்காக 2 புத்தகங்களை வெளியிட்டது.

146. பொருத்துக.

பட்டியல் – I	பட்டியல் – II
a) உலோகப் பணத்திட்டம்	1. பிட்காயின்
b) காகித பணத்திட்டம்	2. ரொக்க அட்டை
c) நெகிழிப் பணம்	3. கட்டளைப் பணத் திட்டம்
d) மெய்நிகர் பணம்	4. தங்கம், வெள்ளி

குறியீடுகள் :

	a)	b)	c)	d)
A)	3	1	4	2
B)	4	3	2	1
C)	4	3	1	2
D)	2	4	1	3

விளக்கம் : **விடை : (B)**

உலோகப் பணத்திட்டம் – தங்கம், வெள்ளி
காகிதப் பணத்திட்டம் – கட்டளைப் பணத்திட்டம்
நெகிழிப் பணம் – ரொக்க அட்டை
மெய்நிகர் பணம் – பிட்காயின்

147. பொருந்தாததை எடுத்து எழுதுக.

நிதி ஆயோக்கின் பணிகள்

A) நிபுணர்களின் கூட்டமைப்பை உருவாக்குதல்
B) பரவலாக்கப்பட்ட திட்டமிடல்
C) கண்காணித்தலும், மதிப்பிடுதலும்
D) வழிகாட்டும் திட்டமிடலும் தூண்டும் திட்டமிடலும்

விளக்கம் : **விடை : (D)**

நிதி ஆயோக்கின் பணிகள்

கூட்டுறவு மற்றும் போட்டி அடிப்படையிலான கூட்டாட்சி

மாநிலங்கள் நாட்டின் கொள்கை வடிவமைப்பதில் துடிப்புடன் பங்கெடுக்கத் தேவையானவற்றை செய்வது.

நாட்டின் நிகழ்வுகளின் மாநிலங்களைப் பங்கெடுக்க வைத்தல்

நாட்டின் முன்னேற்றத்திற்கான முன்னுரிமைகள் மற்றும் உத்திகளில் மாநிலங்களையும் இணைத்துக் கொள்ளுதல்.

பரவலாக்கப்பட்டத் திட்டமிடல்

திட்டமிடல் நடைமுறையை கீழிருந்து மேல் என்ற முறையில் மாற்றம் கொண்டுவருதல்.

தொலைநோக்கு மற்றும் காட்சித் திட்டமிடல்

நாட்டின் எதிர்காலத்தை கவனத்தில் கொண்டு இடைக்கால மற்றும் நீண்டகால தொலைநோக்கு கட்டமைப்பை வடிவமைத்தல்.

நிபுணர்களின் கூட்டமைப்பை உருவாக்குதல்

அரசின் கொள்கைகளை வடிவமைப்பதிலும், திட்டங்களை செயல்படுத்துவதிலும் அரசுக்கு வெளியில் உள்ள நிபுணர்கள் ஒன்றிணைந்து பங்குபெற வைத்தல்.

உகந்ததாக்குதல்

அரசின் பல படிநிலைகளில் பணியாற்றுபவர்களை குறிப்பாக பல துறைகள் ஒன்றிணைந்து செயல்படுமிடங்களில் ஏற்படும் பிரச்சனைகளை களைய தொடர்பு கொள்ளுதல், ஒருங்கிணைத்தல், கைகோர்த்தல் மற்றும் கூட்டிணைத்தல் மூலம் உகந்த பணியை நிதி ஆயோக் செய்கிறது.

சச்சரவுத் தீர்த்தல்

அரசுத் திட்டங்களை வேகமாக செயல்படுத்த மாநில-மைய அரசுகளுக்கு இடையில், மாநிலங்களுக்கிடையில், அரசுத் துறைகளுக்கிடையில் மற்றும் பிற துறைகளுக்கிடையில் நிலவும் சச்சரவுகளுக்குத் தீர்வுகான ஒரு தளத்தை அமைத்துக் கொடுக்கிறது.

வெளியுலகத் தொடர்பை ஒருங்கிணைத்தல்

வெளிநாட்டு நிபுணர்களின் ஆலோசனைகளையும் பன்னாட்டு நிறுவனங்களிலிருந்து கிடைக்கும் நிதி வளங்களையும் நாட்டின் முன்னேற்றத்துக்குப் பயன்படும் வகையில் பெற்றுத்தரும் பொறுப்பு அலுவலகமாக நிதி ஆயோக் செயல்படும்.

உள்நாட்டு ஆலோசனை வழங்குதல்

கொள்கைகள் மற்றும் திட்டங்களை வகுக்க மாநில மற்றும் மைய அரசுகளுக்கு ஆலோசனைகளை வழங்குகிறது.

திறன் உருவாக்குதல்

அரசுத் துறைகளில் திறனை வளர்க்கவும் தொழில் நுட்பத்தை மேம்படுத்தவும், உலக அளவில் தற்போது நடைமுறையில் உள்ள தர அளவுகோல்களை கொண்டும், மேலாண்மை நுட்பங்கள் வழியாகவும் திறன் உருவாக்கும் பணியையும் நிதி ஆயோக் செய்கிறது.

கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல்

அரசு செயல்படுத்தும் திட்டங்களை நிதி ஆயோக் கண்காணித்து அதன் விளைவுகளை மதிப்பீடும் செய்கிறது. அடல் புத்தாக்க கொள்கை, ஆயுஸ்மான் பாரத் அணுகுமுறை ஆகியவை தண்ணீர் வளங்களை பாதுகாக்கும் விதமாகவும், இந்திய மருத்துவ கழகத்திற்கு தேசிய மருத்துவ வாரியம் என பெயர் மாற்றம் செய்வதற்கும் நாடாளுமன்றத்தில் அறிக்கையை தாக்கல் செய்தது நிதி ஆயோக். நிதி ஆயோக் பொறுப்புணர்வையும் உருவாக்குகிறது. இதன் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலுவலகம் அரசின் பல்வேறு துறைகளின் அலுவலகங்களில் புள்ளி விவரத்தை சேகரித்து அவற்றின் செயல்பாட்டை கண்காணிக்கிறது. மாநிலங்களையும் வரிசைப்படுத்தி போட்டியடிப்படையிலான கூட்டாட்சி உணர்வை வளர்க்கிறது.

தொழில்மயம் என்பது மனித உழைப்பைச் சுரண்டுவதற்கும், கிராமப்புற மக்களின் வேலைவாய்ப்பைப் பறிப்பதற்கும் வழிவகுக்கும் என்பதால், அதை மனித இனத்தின் பெரும் சாபக்கேடு என்று கருதினார். காந்தியடிகள் தொழில்மயமாக்கலை எதிர்த்த காரணத்தினால்தான் அதற்கு மாற்றாக கிராமப் பொருளாதாரத்தையும், கிராமங்களின் தன்னிறைவையும் வலியுறுத்தினார். எனவே, காரணம் என்பது கூற்று (A)–விற்கான சரியான விளக்கமாகும்.

148. கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளை மதிப்பீடு செய்யவும்.

கூற்று (A) : காந்தியடிகள் கிராமங்களில்தான் இந்தியா வாழ்வதாகக் கருதினார். தன்னிறைவு பெற்ற கிராமமாக முன்னேறுவதை அவர் விரும்பினார்.

காரணம் (R) : தொழில்மயம் மனித இனத்தின் பெரும் சாபக்கேடு என்று காந்தியடிகள் கருதினார்.

சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

A) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A)-வின் சரியான விளக்கம்.

B) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A)-வின் சரியான விளக்கம் அல்ல.

C) (A) சரியானது மற்றும்(R) தவறானது.

D) (A) தவறானது மற்றும்(R) சரியானது

விளக்கம் : **விடை : (A)**

கூற்று (A) சரி : மகாத்மா காந்தியடிகள் "உண்மையான இந்தியா அதன் கிராமங்களில்தான் வாழ்கிறது" என்று உறுதியாக நம்பினார். கிராமங்கள் தங்களுக்குத் தேவையான உணவு மற்றும் அத்தியாவசியத் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்து கொள்ளும் தன்னிறைவு பெற்ற கிராமக் குடியரசுகளாக (கிராம சுயராஜ்யம்) மாற வேண்டும் என்று அவர் விரும்பினார்.

காரணம் (R) சரி : காந்தியடிகள் பேரளவு இயந்திரப் பயன்பாட்டையும், நவீன தொழில்மயமாக்கலையும் தீவிரமாக எதிர்த்தார். தொழில்மயம் மனித இனத்தின் பெரும் சாபக்கேடு என்று காந்தியடிகள் கருதினார். எனவே (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A)-வின் சரியான விளக்கம்.

149. பொருத்துக.

திட்டம்	ஆண்டு
a) ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் (JRY)	1. 2011
b) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித்திட்டம்	2. 2006
c) தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டம்	3. 1989
d) தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம்	4. 2013

குறியீடுகள் :

	a)	b)	c)	d)
A)	4	3	2	1
B)	1	2	3	4
C)	3	2	1	4
D)	2	1	3	4

விளக்கம் : **விடை : (C)**

வறுமை ஒழிப்புத் திட்டங்கள்

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் (JRY) – 1989

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டம் (MGNREGS) – 2006 தற்போது இத்திட்டம் பாரத ஊரக வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார உறுதியளிப்புத் திட்டம். (VB–G RAM G) எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் – 2011

தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம் – 2013

150. பொருத்துக.

பட்டியல் – I	பட்டியல் – II
a) பணமோசடி நடவடிக்கை தடுப்புச் சட்டம்	1. 2016
b) ஊழல் தடுப்புச் சட்டம்	2. 2015
c) வெளிக்கொணரப் படாத வெளிநாட்டு வருமானம் மற்றும் சொத்து மசோதா	3. 2002
d) ரியல் எஸ்டேட் (ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு) சட்டம்	4. 1988

குறியீடுகள் :

	a)	b)	c)	d)
A)	3	4	2	1
B)	4	3	1	2
C)	1	2	3	4
D)	2	1	4	3

விளக்கம் : **விடை : (A)**

கறுப்புப் பணத்திற்கு எதிரான சட்டங்கள்

பணமோசடி நடவடிக்கை தடுப்புச் சட்டம் 2002.

ஊழல் தடுப்புச் சட்டம் 1988.

வெளிக் கொணரப்படாத வெளிநாட்டு வருமானம் மற்றும் சொத்து மசோதா (வரிவிதித்தல்)–2015.

பினாமி பரிவர்த்தனை தடுப்புச் சட்டம் 1988, இது 2016–இல் திருத்தப்பட்டது.

ரியல் எஸ்டேட் (ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு) சட்டம் 2016.

லோக்பால் மற்றும் லோக்ஆயுக்தா சட்டம் 2013